KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:

# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 132 குரோதி வருடம், மார்கழி மாதம் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(24.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 22, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

# இனப்படுகொலைக்கு நீதி தேடுவோம்!



## கனேடிய அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரியைச் சந்தித்து வலியுறுத்தினார் சிறீதரன் எம்.பி.

தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு சர்வதேச ரீதியில் நீதி தேடவேண்டிய தேவை இருப்பதால் அது தொடர்பில் ஈழத் தமிழ் புலம் பெயர் பிரமுகர்கள் ஒன்றுபட்டு கூட்டாக செயற்பட வேண்டிய தேவை இருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கனடாவில் தெரிவித்துள்ளார்.

கனடாவின் முடிக்குரிய பூர்வீகக் குடிகள், வடக்கு விவகாரங்கள் மற்றும் வடக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்களுக்கான அலுவல்கள் அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரி, முடிக்குரிய சுதேசியக் குடிகள் விவகார அமைச்சின் பாராளுமன்ற செயலாளர் ஜேமி பாடிஸ்டி, கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் பிரான்செஸ்கோ சோர்பரா ஆகியோருக்கும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்... » 02 பக்கம்

## அடுத்தவாரம் பாடசாலை ஆரம்பம்

அரச மற்றும் அரை அரச (Semi Government) பாடசாலைகளுக்கான 2024ஆம் ஆண்டின் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் 02ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், சகல பாடசாலைகளதும் மூன்றாம் தவணை எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதியன்று நிறைவடையும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் நேற்று (23) அறிக்கையொன்றை வெளியிட்டே கல்வி அமைச்சு இதனை அறிவித்துள்ளது. அதனைத்தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2024 (2025) ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 26ஆம் திகதிவரை இடம் பெறுமென்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## பண்டிகையை முன்னிட்டு விசேட போக்குவரத்து



நத்தார் பண்டிகையை முன்னிட்டு மேலதிக விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாக போக்குவரத்துப் பிரிவு அறிவித்துள்ளது. அதற்கமைய, இன்று (24) முதல் விசேட பஸ் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

» 02 பக்கம்

## உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தம் அவசியம்

### அதுவரை திகதியை வெளியிட முடியாதென ஆணைக்குழு அறிவிப்பு




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, அரசியலமைப்பின் பிரிவு 98 (08) ஆம் பிரிவின் கீழான கட்டளையின் பிரகாரம், 2021ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க வாக்காளர்களை... » 02 பக்கம்

## மக்கள் பிரதிநிதிகள் குடிமக்களின் நண்பர்களாக இருக்க வேண்டும்



புரிதல் இன்றேல் தே.ம.சக்திக்கு எதிர்காலம் இல்லையென திலித் சுட்டிக்காட்டு

»02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



திருடர்களை பிடிப்பதா ஆட்சிக்கு வந்த அரசாங்கம் குரங்குகளை பிடிச்சுக்கொண்டிருக்குது...

## ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமையிலிருந்து முப்படை நீக்கம்

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த முப்படை அதிகாரிகளை சேவையிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானம் நேற்று (23) முதல் அமுலாக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இடம்பெற்ற பாராளுமன்ற கூட்டத் தொடரின்போது, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக கடமையில்... » 02 பக்கம்

## உஷ்



ரணில் அரசில் காவல்துறைக்கு பொறுப்பான அமைச்சராக இருந்தவர் மீது புதிய வழக்குகள் பாயவுள்ளதாக தகவல்.

போதைவஸ்து ஒழித்தல் என்ற பெயரில் இடம்பெற்ற செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட தரப்புகள் இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தகவல்.




»07 பக்கம்

## அரிசிக்கான கேள்வி தொடர்ந்தும் அதிகரிப்பு

சந்தையில் பச்சை அரிசி, சம்பா மற்றும் நாட்டரிசி என்பவற்றுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இந்த அரிசி வகைகள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டாலும் அவை அதிக விலைக்கு விநியோகிக்கப்படுவதால் சிறு வியாபாரிகள் அரிசி கொள்வனவு செய்வதில்லை என்றும் மரந்தகஹமுல அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள 5,200 மெட்ரிக் தொன் அரிசி தொகை இன்று நாட்டை வந்தடையவுள்ளது. நாட்டில் ஏற்பட்ட அரிசித் தட்டுப்பாடு மற்றும் நிர்ணய விலையை விடவும் கூடிய விலையில் அரிசி விற்பனை செய்யப்பட்டமையின் காரணமாக, அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்தது.

» 02 பக்கம்

## சாஹித்ய ரத்னா அன்னலட்சுமிக்கு கௌரவம்




சாஹித்ய ரத்னா விருதுபெற்ற மூத்த பெண் ஊடகவியலாளர் அன்னலட்சுமி இராஜதுரையை ஹாஷிம் உமர் பௌண்டேசன் நேற்றுமுன்தினம் பாராட்டி கௌரவித்தது. இதன்போது புரவலர் ஹாஷிம் உமர், பாரியார் மரியம் உமர் இணைந்து அன்னலட்சுமி இராஜதுரையை பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவித்தனர். சிரேஷ்ட பத்திரிகையாளர் வீ.தனபாலசிங்கமும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சித் தேர்தலை ஏப்ரலில் அறிவியுங்கள்

### உதய கம்மன்பில வேண்டுகோள்



மார்ச் மாதத்தின் இறுதி வாரத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளதால் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிவிதுரு ஹெல உருமயவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (23) இடம்பெற்ற செய்தியாளர்... » 02 பக்கம்

ஜனவரி முதல்...




பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308/0741684643

# பணம் தூயதாக்கல் - பயங்கரவாதத்துக்கு நிதியிடலை ஒழிப்பதற்கான கட்டமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்





பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியிடலை ஒழிப்பதற்கான ஆசிய பசுபிக் குழுவின் மூலம் நடத்தப்பட விருக்கும் இலங்கையின் பரஸ்பர மதிப்பீட்டுக்கான முக்கிய தயார்படுத்தல் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்று(23) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அமைச்சுகள், ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்கல் முகவராண்மை நிறுவனங்கள் உள்ளடங்கலாக 24 நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட திட்டங்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை நிதியியல் உளவறிதல் பிரிவு இங்கு வலியுறுத்தியது.

நிதியியல் நடவடிக்கைச் செயலணியினால் (FATF) தயாரிக்கப்பட்டு பரிந்துரைகளை முன்னெடுப்பதற்கான சட்டரீதியிலான மறுசீரமைப்புகள், இயலளவு விருத்தி, முகவராண்மைகளுக்கிடையிலான மேம்பட்ட கூட்டிணைப்பு, அனைத்தையும் உள்ளடக்கிய புள்ளிவிபரங்களைப் பேணுதல் என்பவற்றுக்கு இந்த செயற்பாட்டுத் திட்டம் முன்னுரிமையளித்துள்ளது.

இத்திட்டங்களுடன் முழுமையான இணக்கப்பாட்டை உறுதிசெய்வதற்கு பிரத்தியேகக் குழுக்களை நியமிக்குமாறும் அதன் முன்னேற்றத்தை உன்னிப்பாகக் கண்காணிக்குமாறும் நிதியியல் உளவறிதல் பிரிவு,பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்தோடு, இந்தச் செயற்பாடு தொடர்பில் ஒத்துழைப்புடன் அர்ப்பணிக்குமாறு கோரிய ஜனாதிபதி, இலங்கையின் நிதிக்கட்டமைப்பு ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் சர்வதேச நம்பிக்கையை மேம்படுத்துவதற்கும் அதனூடாக சாதகமான பெறுபேறுகளைப் பெறவும் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியிடலை ஒழிப்பதற்கு பலமான மற்றும் செயற்திறனுள்ள கட்டமைப்பொன்று அவசியமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்துகொண்டனர்.

# யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு; வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கத் தீர்மானம்

பு.கஜிந்தன்



யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான ஆசிரியர்கள் இருப்பதால் வெளிமாவட்டங்களில் அவர்கள் மீண்டும் பணிபுரிய வேண்டிய நிலைமை ஏற்படலாமெனச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், ஒருபோதும் வெளி மாவட்டங்களில் பணியாற்றாதவர்களை விரைவில் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றவேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வெளிமாவட்டங்களில் கடமைபுரியும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள், வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் நேற்று (23) சந்தித்துக் கலந்துரையாடினர்.

வெளிமாவட்டங்களில் தாம் நீண்டகாலம் பணியாற்றுவதாகவும் செல்வாக்குகளின் அடிப்படையில் சிலர் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனரெனவும் சுட்டிக்காட்டிய அவர்கள், தமக்குப் பின்னர் நியமனம் பெற்றவர்கள் கூட சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ள நிலையில், தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஆளுநரிடம் முறையிட்டனர்.

வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பணியாற்றவேண்டுமெனவும் அவ்வாறு இதுவரை பணியாற்றாத ஆசிரியர்கள் இருப்பின் உரிய நடைமுறைகளைமைவாக அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுமென்றும் குறிப்பிட்டார்.

உரிய காரணங்கள் இல்லாமல் இடமாற்றங்களை வழங்க முடியாதெனக் குறிப்பிட்ட ஆளுநர், வெளிமாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு ஆசிரியரொருவர் இடமாற்றப்படும்போது அதே பாடத்துக்குரிய ஆசிரியர் வெளிமாவட்டத்துக்கு விடுவிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார். எதிர்காலத்தில் இந்த நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படுமெனவும் ஆளுநர் கூறினார்.

# மின்கட்டணத் திருத்தம் தொடர்பிலான மக்கள் கருத்துக்கணிப்பு இவ்வாரம்

மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் பொது மக்களின் கருத்துகளைப் பெறும் நடவடிக்கை எதிர்வரும் 27 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கட்டணத் திருத்தம் தொடர்பில் மின்சாரசபை முன்வைத்த யோசனை மற்றும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள மாற்று யோசனைகள் தொடர்பில் இதன்போது மக்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளது.

எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு மின் கட்டணத்தைத் திருத்தக்கூடாது என்று மின்சார சபையினால் அண்மையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாற்று யோசனையை முன்வைத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நூற்றுக்கு 10 - 20 என்ற விகிதத்தில் மின் கட்டணத்தைக் குறைக்கக்கூடியதாக இருக்குமென்று சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கமைய, இந்த யோசனை தொடர்பில் பொதுமக்களின் நிலைப்பாட்டை எழுத்துமூலம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை கடந்த 17 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்ததுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி வாய்மூல கருத்துக்கணிப்புகளை கண்டி பிரதேசத்தில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

வாய்மூல மற்றும் எழுத்து பூர்வமான நிலைப்பாட்டைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதன் இறுதி அறிக்கையை எதிர்வரும் மாதம் 17 ஆம் திகதி முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலில் தனித்து போட்டியிடும் பொதுஜன பெரமுன

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட ஆராய்வதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது கூட்டணியில் முக்கிய பங்காளியான லங்கா சமசமாஜக் கட்சியுடன் மாத்திரம் இணைந்து செயற்படுவது குறித்துக் கட்சி ஆராய்வதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை மற்றும் நிறைவேற்றுக்குழு அண்மையில் கூடிய கூட்டத்தின்போதே இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

பெரும்பாலான உறுப்பினர்கள் பொதுஜன பெரமுன கூட்டணியை உருவாக்காமல் தனித்து உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் யோசனைக்கு ஆதரவளித்தனர். எவ்வாறாயினும், எதிர்கால முன்னேற்றங்களைப் பொறுத்து இந்த நிலைப்பாடு மாறக்கூடுமென்று சில உறுப்பினர்கள் தெரிவித்தனர். பொதுத் தேர்தலின்போது கட்சியை விட்டு வெளியேறிய நபர்களை மீண்டும் இணைத்துக் கொள்வது குறித்தும் கூட்டத்தில் பேசப்பட்டது. கட்சி உறுப்பினர்கள் பலர் முன்னாள் உறுப்பினர்களை வரவேற்பதை ஏற்றுக்கொண்டாலும் கட்சிக்குள் ஒரு பிரிவினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

## உள்ளூராட்சித் தேர்தலை...

சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி ஊடகங்களுக்கு அறிவித்திருக்கிறார். சட்டவாக்கம் தொடர்பில் தெளிவில்லாமலேயே ஜனாதிபதி இவ்வாறான கருத்தை முன்வைத்திருக்கிறார். தற்போதுவரையில் கோரப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச்செய்வதற்காக பாராளுமன்றத்தில் சட்டமொன்றை நிறைவேற்றுவதற்காக அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு மூன்று வாரங்கள் கடந்துவிட்டன. ஆனால், சரியான சட்டமொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கத்துக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவையில் அனுமதிபெற்று வர்த்தமானியில் வெளியிட்டு இருவாரங்களாகும்வரை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியாது. ஒருவேளை நேற்றைய அமைச்சரவையில் இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்குமாக இருந்தால் ஜனவரி மாதம் 14ஆம் திகதிவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது.

அடுத்த வருடத்தின் முதலாவது சபைக் கூட்டம் ஜனவரி 21ஆம் திகதியே இடம்பெறும். 21ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மேலும் இருவார காலம் வழங்கப்படவேண்டும். அவ்வாறெனில், பெப்ரவரி 05ஆம் திகதியே இந்தச் சட்டமூலத்துக்கு அனுமதி பெற்று முழுமை செய்ய முடியும். அதனை முறையாக ஒழுங்குபடுத்தி சபாநாயகரிடம் கையொப்பம் பெற இரு நாட்களாவது ஆகும். அதன் பின்னரே அது சட்டமாக அமுலாக்கப்படும்.

அவ்வாறெனில், பெப்ரவரி 08 ஆம் திகதியே தேர்தல் ஆணைக்குழு அவசரமாக ஒன்றுகூடி தேர்தல் அறிவிப்புக்கான தீர்மானங்களை எடுக்கும். 09ஆம் திகதி தேர்தலை அறிவித்தால் பெப்ரவரி 23 – 26ஆம் திகதிவரை வேட்புமனுக்கள் பொறுப்பேற்கப்படும்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் 05 - 07 வாரங்களில் தேர்தல் இடம்பெற வேண்டும். அவ்வாறெனில், ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி தேர்தல் இடம்பெற வேண்டும். எனவே, இன்றே (நேற்று) சட்டமூலத்தை சமர்ப்பித்து நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுத்தால் மாத்திரமே ஏப்ரல் 05ஆம் திகதி தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும். இதற்கிடையில் மார்ச் மாதத்திலேயே சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

எனவே, பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியிலேயே தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதனால், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படையலாம். அதனால், பரீட்சைக் காலத்தில் தேர்தலை நடத்துவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். எனவே, ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் தேர்தலை அறிவித்தால் மே மாதத்தின் இடைப் பகுதியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தக் கூடியதாக இருக்கும். எனவே, சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு சுதந்திரமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்து பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார்.

## இனப்படுகொலைக்கு...

சிவஞானம் சிறிதரனுக்குமிடையிலான சந்திப்பு கடந்த வார இறுதியில் கனேடிய பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது "இலங்கையில் நடந்தது இனப்படுகொலை தான் என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்வதில் பின்னிற்கும் சர்வதேச அரங்கில், ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசால் புரியப்பட்டது இனப்படுகொலை தான் என்றும், இறுதிப்போரின் போது கொல்லப்பட்டோருக்காகவும் மனித உரிமை மீறல்களைச் சந்தித்தோருக்காகவும் நாம் தொடர்ந்தும் நீதி கேட்போம்" - என்றும் வலியுறுத்தி வருவதன் மூலம் ஈழத்தமிழர்களின் நீதியின் முகமாக கனடாவை அடையாளப்படுத்தும் வகையில் 2022.05.20 ஆம் திகதி கனேடிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு காரணமாக இருந்த ஹரி ஆனந்தசங்கரிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இதன்போது நன்றி தெரிவித்தார். அத்துடன், அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் குறித்தும் உரையாடியிருந்த சிறிதரன் எம்.பி., ஈழத்தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் சர்வதேச செயற்பாடுகளில் அமைச்சர் ஹரியின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் அவசியமென்று சுட்டிக்காட்டினார்.

அதேபோல், எதிர்காலத்தில் தமிழர் விவகாரங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியத்தையும் சிறிதரன் எம்.பி. இங்கு வலியுறுத்தியுள்ளார்.

## உள்ளூராட்சித் தேர்தல்...

பதிவு செய்யும் சட்டத்தைத் திருத்துவதாக கடந்த 20ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் அதிவிசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும்வரை தேர்தல் திகதியை அறிவிப்பதில் சட்டரீதியான தடை இருப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க, தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதுடன் தேர்தல் திகதி அறிவிக்கப்படுமென்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் திருத்தம் மேற்கொள்ளப்படுமெனவும் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழு கடந்தகாலங்களில் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அண்மையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை இரத்துச்செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது. இதனால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு மீண்டும் வேட்புமனுக்களைக் கோரவேண்டிய ஏற்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களுக்காக 80,000 பேர் தோற்றவுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து பல செலவு அறிக்கைகள் வரவழைக்கப்படுவதால் இது நடைமுறையில் கடினமான விடயமாக இருக்குமெனவும் தேர்தல் ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பண்டிகையை முன்னிட்டு...

பண்டிகை நிறைவடையும் வரை ஒவ்வொரு நாளும் 50 மேலதிக பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்துச் சபைப் பிரதி பொதுமுகாமையாளர் பண்டுக சுவர்ணஹங்ச தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"தேவை ஏற்பட்டால் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த சகல டிப்போ முகாமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பஸ்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஊர்களுக்கு சென்ற மக்கள் மீண்டும் கொழும்பை நோக்கி வருவதற்காக அடுத்த திங்கட்கிழமை வரை விசேட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்" - என்றார்.

இதேவேளை, பண்டிகையை முன்னிட்டு விசேட ரயில்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 27ஆம் திகதி இரவு பதுளை வரை விசேட ரயில் சேவை மற்றும் கொழும்பு கோட்டையிலிருந்து விசேட ரயில் சேவை வழங்கப்படவுள்ளதாகவும் ரயில் திணைக்களத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் (போக்குவரத்து) என்.ஜே.இந்திபொலகே தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 28ஆம் திகதி காலை பதுளை வரை விசேட ரயில் சேவையும் 29ஆம் திகதி இரவு பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை வரை விசேட ரயில் சேவையும் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் வரை பயணிக்கும் கடுகதி ரயில் சேவைக்கும் யாழ்தேவி கடுகதி ரயில் சேவைக்கும் மேலதிக ரயில் பெட்டிகளை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## அரிசிக்கான கேள்வி

அதற்கமைய, இதுவரையில் தனியார் துறை மற்றும் அரசாங்கத் தரப்பினால் 67,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அரச வணிக இதர சட்டப்பூர்வ கூட்டுத்தாபனத்தால் 5,200 மெற்றிக் தொன் அரிசி தொகை இரண்டு கட்டங்களாகவும் 20,800 மெற்றிக் தொன் அரிசித் தொகைக்கான இரண்டு விலைமனு கோரல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச வணிக இதர சட்டப்பூர்வ கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவீந்ர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதில் 5,200 மெற்றிக் தொன் அரிசித் தொகையின் முதலாம் கட்டம் இன்று (24) நாட்டை வந்தடையவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களில் மூடப்பட்டிருந்த மரதகஹமுல்ல அரிசி விற்பனை நிலையம் நேற்று (23) மீண்டும் திறக்கப்பட்டது. அரிசியை மாத்திரம் விற்பனை செய்யும் 46 வர்த்தக நிலையங்கள் இருப்பதுடன் அவற்றில் 12 வரையான விற்பனை நிலையங்கள் மாத்திரமே திறக்கப்பட்டுள்ளதாகவும் மரதகஹமுல்ல அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பீ.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கீரி சம்பா, கெகுலு சம்பா மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் மாத்திரமே விற்பனை செய்யப்படுகின்றன. பச்சை அரிசி, சம்பா மற்றும் நாட்டரிசி விற்பனை செய்யப்படுவதில்லை. இந்த அரிசி வகை சந்தைக்கு விநியோகிக்கப்பட்டாலும் கட்டுப்பாட்டு விலைக்கு அதிக தொகையிலேயே கிடைக்கப்பெறுகிறது. கட்டுப்பாட்டு விலைக்கு அப்பாலான தொகையில் அரிசியை இறக்குமதி செய்து தயாராக இல்லை. அவ்வாறு அதிக விலையில் அரிசியைக் கொள்வனவு செய்ய சிறியளவான வியாபாரிகள் தயாராக இல்லை. இதுவே உண்மை நிலைமையாகும். இதனால் அரசாங்கத்தையும் நெருக்கடிக்குள்ளாக்கும் எண்ணம் தமக்கில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதிகளின் பாதுகாப்பு...

ஈடுபடுத்தப்பட்டிருந்த முப்படை அதிகாரிகளை நீக்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால விளக்கமளித்திருந்தார். அதற்கமைய, நேற்றிலிருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக பொலிஸ் அதிகாரிகள் மாத்திரம் கடமையில் ஈடுபடுவார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

தற்போதுவரையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முப்படை அதிகாரிகளை சேவையிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு போதுமான எண்ணிக்கையில் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது

மேலும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை ஆறு மாதத்துக்கு ஒருமுறை மறுசீராய்வுச் செய்து அதற்கமைய பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்படுமென்றும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. முப்படையினர் நீக்கப்பட்டிருந்தாலும் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு எந்தவொரு விதத்திலும் பிரச்சினை ஏற்படுவதற்கு இடமளிக்கப்போவதில்லையென்றும் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அதிகாரிகளுக்காக அதிக நிதியொதுக்கீடு செய்யப்படுவதால் அவர்களின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரிகளின் எண்ணிக்கையை இவ்வாறு குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## மக்கள் பிரதிநிதிகள்...

"பொய் கூறியாவது அரசியலில் நிலைக்க வேண்டும் என்பதற்காகவே தேசிய மக்கள் சக்திக்கு ஜனநாயக ரீதியாக அதிகாரம் கிடைத்துள்ளது. அடிமட்ட மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்ளாவிட்டால் தேசிய மக்கள் சக்திக்கு எதிர்காலம் இல்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எனவே, மக்களின் நண்பர்களாக இருப்பவர்களே அவர்களின் பிரதிநிதிகளாக இருக்கவேண்டுமென்றே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்" - என்று தாயக மக்கள் கட்சியின் தலைவரும் சர்வசன அதிகாரம் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நேற்று (23) தாயக மக்கள் கட்சியில் இணைந்து கொண்டார். அவருக்கான கட்சி அங்கத்துவம் கட்சித் தலைவர் திலித் ஜயவீரவினால் வழங்கப்பட்டது. அந்நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"தாயக மக்கள் கட்சி தோற்றம்பெற்று ஒரு வருடத்துக்குள் சவாலுக்குரிய இரு தேர்தல்களை எதிர்கொண்டோம். சர்வசன அதிகாரம் கூட்டணியாகவும் ஏனைய கட்சிகளுடன் கூட்டணியொன்றிலும் இணைந்துகொண்டுள்ளோம். கடந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை பலம் கிடைத்திருந்தாலும் நாங்கள் மக்களுடன் இருந்தே அரசியல் செய்கிறோம். இடதுசாரி முகாமை ஒன்றிணைத்து நாட்டில் அதிக எண்ணிக்கையிலான மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக பலத்தை ஏற்படுத்திக்கொடுக்கவே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மக்கள் மத்தியில் நாங்கள் உருவாக்க எதிர்பார்க்கும் கருத்தாடலில் உண்மையான நபர்கள் எங்கு இருக்கிறார்கள், அவர்களுடன் இருக்கும் கொடுக்கல் வாங்கல் என்ன என்பதே மிகவும் முக்கியமானதாகும். மாறாக, போலி நபர்களுடனான கொடுக்கல் வாங்கல் தொடர்ந்தும் நீடிக்காது.

எனவே, அடிமட்ட மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்ளாவிட்டால் தேசிய மக்கள் சக்திக்கு எதிர்காலம் இல்லையென்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பொய் கூறியாவது அரசியலில் நிலைக்க வேண்டும் என்பதற்காகவே ஜனநாயக ரீதியாக தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரம் கிடைத்துள்ளது. எனவே, மக்களின் நண்பர்களாக இருப்பவர்களே அவர்களின் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்" - என்றார்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மார்கழி மாதம் 09ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** சுயதொழில் மூலம் நன்மைகள் இலாபங்கள் உண்டு. உடல்,மன நோய்களால் சற்றுத் தொந்தரவுகள் உண்டு.

**ரிஷபம்** வீணான மனக் கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**மிதுனம்** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**கடகம்** உங்கள் தேவைக்காக பணம் கிடைக்கும். மனத் துணிவுடன் உங்கள் காரியங்களில் வெற்றி கொள்வீர்கள்.

**சிம்மம்** யாருக்கும் வாக்களிக்காதீர்கள். கடன் கொடுப்பது, பெறுவது சில பிரச்சினை களை ஏற்படுத்தும். எச்சரிக்கை வேண்டும்.

**கன்னி** மனதில் ஒருவித பய உணர்வு, படபடப்பு தோன்றும். வீண் டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**துலாம்** தேவையற்ற பயணங்களையும் செலவுகளையும் குறைத்துக்கொள் ளுங்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**விருச்சிகம்** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு** நீங்கள் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**மகரம்** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள்.மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**கும்பம்** எதற்கும் அவசரம் வேண்டாம். மௌனம் காப்பது, தேவையற்ற டென்ஷனால் மனதையும் உடலையும் கெடுத்துக்கொள்ளாதீர்கள்.

**மீனம்** இன்று உங்கள் உழைப்புக்கு முக்கியத் துவம் கொடுக்காவிட்டால் பொருளா தாரச் சிக்கல்களைச் சந்திப்பீர்கள்.

**திதி:**நவமி பி.ப.7.52 வரை பின் தசமி

**நட்சத்திரம்:**அஸ்தம்; பி.ப.12.17 வரை பின் சித்திரை

**பிறை:**தேய்பிறை

**யோகம்:** சித்த யோகம்; பி.ப.12.17 வரை பின் மரண யோகம்

**வார சூலை:**வடக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது.

**நல்ல நேரம்:**காலை- 8.19 – 9.19 மணி வரை

பகல் - 12.19 – 1.19 மணி வரை மாலை- 4.49 – 6.49 மணி வரை

**ராகு காலம்:**3.49 – 4.45 மணி வரை

**எமகண்டம் :**9.19 – 10.49 மணி வரை

**குளிகை :**12.19 – 1.49 மணி வரை

**சந்திராஷ்டமம்:**கும்ப-மீன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

(பின்னிரவு 1.51 வரை கும்ப ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 12.17 மணி வரை**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்தராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**இன்று பிற்பகல் 12.17 மணிக்கு மேல்**

பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# வடக்கு மாகாணத்தை அச்சுறுத்தும் எலிக்காய்ச்சல்; பாலூட்டிகளின் இரத்த மாதிரிகளை சேகரிக்க நடவடிக்கை

வட மாகாணத்திலுள்ள பாலூட்டிகளின் இரத்த மாதிரிகளைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வட மாகாணத்தில் அண்மைக்காலமாக எலிக் காய்ச்சல் நோய்த்தொற்று ஏற்பட்டமை குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்காக இந்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த இரத்த மாதிரிகள் கால்நடை மருத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மைய நாட்களில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் எலிக்காய்ச்சல் நோயினால் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக எதிர்வரும் காலங்களில் வட மாகாணத்தில் பதிவாகும் எலிக்காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக்கூடுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில், நாட்டில் சுமார் 12,000 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தில் சுமார் 200 பேர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எலிகளின் சிறுநீர் மூலமோ அல்லது ஏற்கனவே உள்ள காயங்கள் மூலம் உடலில் நுழையும் வைரஸ் மூலமாகவோ எலிக்காய்ச்சல் நோய்த்தொற்று ஏற்படலாமென்று சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

கண்கள் சிவத்தல், காய்ச்சல், சிறுநீரின் அளவு குறைதல், கடுமையான தலைவலி மற்றும் தசைவலி என்பன எலிக்காய்ச்சலின் அறிகுறிகளாக அவதானிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

# பட்டதாரிகள் 154 பேருக்கு ஆசிரிய நியமனம்



**(இரத்தினபுரி நிருபர்)**

சப்ரகமுவ மாகாணத்தில் புதிதாக 154 பட்டதாரிகளுக்கு நேற்று (23) ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இலங்கையின் ஆசிரிய சேவைக்கு சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் இவ்வருடம் (07.04.2024) நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சாந்த பத்மகுமார, இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ராஜபக்ஷ, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் புஷ்பகுமார திசாநாயக்க, சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆரச்சி, மாகாணக் கல்விப் பணிப்பாளர் தர்ஷினி இந்தமல்கொட உட்பட அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ரயில் பாதை புனரமைப்பு; கம்பஹா - ஜாஎல வீதியூடான போக்குவரத்து இடைநிறுத்தம்

கம்பஹா - ஜா - எல பாதை வழியாக எதிர்வரும் 2024.12.28ஆம் திகதிமுதல் 2024.12.30ஆம் திகதிவரை வாகனப் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா - ஜா -எல பாதை வழியாக காணப்படுகின்ற ரயில் குறுக்கு வீதியில் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் 2024.12.28ஆம் திகதிமுதல் 2024.12.30ஆம் திகதிவரை கம்பஹா - ஜா-எல பாதை வழியாக வாகனப் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

# நத்தார் பண்டிகையின் வரலாறு!

நத்தார் என்றவுடன் எல்லோருக்கும் முதலில் நினைவுக்கு வருவது கிறிஸ்தவ நண்பர்கள் வீட்டுக்குச் சென்றால் கேக், தடல்புடல் விருந்து தான். ஆனால், நத்தார் கொண்டாட்டம் தொடங்கிய பின்னணியும் அதில் ஏற்பட்ட பல மாறுதல்கள் குறித்தும் பலருக்கும் தெரியாது. இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினம்தான் நத்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால், இயேசுநாதர் எப்போது பிறந்தார், நத்தார் என்ற வார்த்தையின் பின்னணி என்ன ஆகியவை சுவாரஸ்யமானவை.

கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை 'கிறிஸ்ட் மாஸ்' என்ற 2 வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. இயேசுகிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாகத் தெரியவில்லை என்பதால், கி.மு.7க்கும் கி.மு.2க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். அதுபோலவே யூதர்களின் பருவகாலம், நாட்காட்டிகள் மூலம் கணக்கிட்டு, ஒரு யூக அடிப்படையில்தான் டிசம்பர் 25ஆம் திகதி நத்தார் பண்டிகையாகக் கொண்டாடப்படுவதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

நத்தார் பண்டிகையை முதன் முதலில் 4ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த மேற்கத்தேய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. ஆனால், வேறு சில பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து, ஜனவரி 6ஆம் திகதி இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர். எப்படியிருப்பினும், நத்தார் பண்டிகை என்பதை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பான நாளாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்தத் தினத்தை கிறிஸ்தவர்கள் விசேஷமாகக் கருதுவதால் அன்றைய தினம் பல புதிய பணிகளைத் தொடங்குவதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கி.பி.800ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையன்று, சார்லிமேனி என்ற பேரரசன் மன்னராகப் பதவியேற்றான். அதன்பிறகு கி.பி.855ஆம் ஆண்டு இட்முண்ட் என்ற தியாகி மன்னராக முடிசூட்டப்பட்டான். கடந்த 1066ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் வில்லியம்-1 மன்னராக முடிசூட்டப்பட்டார். மேலும், 1377ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ரிச்சர்ட்-2 நத்தார் பண்டிகையை மிக விமரிசையாகக் கொண்டாடினார். கடந்த 1643ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு 'கிறிஸ்துமஸ் தீவு' என்று பெயரிடப்பட்டது. இப்படி கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்டு மக்களிடையே பிரபலமடைந்து, பின்னர் உலகமெங்கும் விமரிசையாகக் கொண்டாடும் வழக்கம் உருவானது. நத்தார் பண்டிகையன்று மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள பரிசுப் பொருட்களைப் பரிமாறிக்கொள்வதும் போட்டிகளை நடத்துவதுமென்று பல கோணங்களில் கொண்டாட்டம் விரிவடைந்தது. நத்தார் பண்டிகைக்காக முதன்முதலில் கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் வழக்கம், 1510ஆம் ஆண்டு ரிகா என்ற இடத்தில் தொடங்கியது.

கடந்த 1836ஆம் ஆண்டு நத்தார் பண்டிகைக்கு அலபாமா என்ற பகுதியில் அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. 1840ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதன் முதலாக கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் தொடங்கியது. நத்தார் பண்டிகையின்போது கிறிஸ்தவர்கள் குழுக்களாகச் சேர்ந்து கரோல் சேர்விஸ் என்ற நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இந்தக் கரோல் நிகழ்ச்சியில் குழந்தை இயேசுவை வாழ்த்தியும் அவரது பிறப்பு, அவர் உலகில் வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துகளைக்கொண்ட பாடல்கள் பாடப்படுவது வழக்கம். கடந்த 1847ஆம் ஆண்டு பிரான்சில்தான் முதன் முதலாக நத்தார் கரோல் நிகழ்வு நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. இந்தக் கரோலில் 'ஓ ஹோலி நைட்' என்ற பிரபல நத்தார் பாடல் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நத்தார் பண்டிகையையொட்டி வரலாற்றில் சில ருசிகரமான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. பண்டைய காலத்தில் வாழ்ந்த பாரசீகர்களும் பாபிலோனியர்களும் நத்தார் பண்டிகையை வருடத்தின் நல்ல நாளாகக் கொண்டாடி வந்தனர். நத்தார் பண்டிகையன்று பாரசீக நாட்டிலுள்ள எல்லா அடிமைகளுக்கும் ஒருநாள் விடுதலை அளிக்கப்படும். மேலும், சிலர் தங்கள் அடிமைகளைப் பரிசாகப் பரிமாறிக்கொண்டனர். சில எஜமான்கள் நத்தார் பண்டிகையன்று மட்டும் அடிமைகளுக்கு வீட்டில் முழு சுதந்திரம் கொடுத்ததாகவும் வரலாற்றில் குறிப்புகள் உள்ளன.

பண்டைய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் பேய், பிசாசு, அசுத்த ஆவிகள் உள்ளிட்டவைகளுக்கு அதிகமாகப் பயந்தனர். வருடத்தில் நீண்ட இரவுகொண்ட நாட்களில் அவை மக்களுக்குத் தீமை விளைவிக்கும் என்று நம்பினர். இதனால் நீண்ட இரவுகளுக்குப் பிறகு சூரியன் உதிக்க வேண்டுமென்பதற்காக நத்தார் பண்டிகையைக் கொண்டாடி வந்துள்ளனர்.

**மொத்தத்தில் நல்லது ஓங்கவும் அல்லது அழியவும் இந்த நன்னாளை உலக மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இயேசு கிறிஸ்துவை மன்றாடி, புகழ் பாடி மகிழ்கின்றனர் என்பது சந்தோஷமான விடயம்தான்.**





தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2024 டிசம்பர் 24ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஜனாதிபதி அநுரகுமாரவின் முன்மாதிரியை வரவேற்போம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுகயீனமுற்ற அவரது தாயாரை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சந்தித்துப் பேசும் படமொன்று சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை (20) பிற்பகல் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தனது தாயாரைப் பார்வையிட்டார். எவருக்கும் தெரிவிக்காமல் ஜனாதிபதி தனது தாயாரைப் பார்க்கச் சென்றதாகவும் அவரது திடீர் வருகையை வைத்தியசாலை ஊழியர்கள் அறிந்திருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதியின் தாயார் கடந்த ஒரு வார காலமாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஜனாதிபதியின் இந்த எளிமையான செயற்பாடு பல மட்டங்களிலும் பாராட்டப்படுகிறது. அதேசமயம், அந்த எளிமையான குணம் என்பதற்கப்பால் அரச அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாத அவரின் மாண்பும் அதில் வெளிப்படுத்தப்படுகிறது. எளிமையான அரசியல் தலைவர்கள் மக்கள் மனங்களில் நினைவில் நிற்கிறார்கள் என்பதை பதிய இங்கே உலக வரலாறைக் குறிப்பிட்டுக் கூறவேண்டியுள்ளது. அது தமிழகத்தின் முதுபெரும் அரசியல் தலைவர் கர்மவீரர் காமராஜர் பற்றியது.

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன், விருதுநகரிலுள்ள காமராஜரின் வீட்டுக்கு கோடை காலத்தின் பொழுது சென்றிருந்தார். அப்பொழுது காமராஜரின் தாயார் சிவகாமி அம்மாள் பனை ஓலை விசிறியால் விசிறிக்கொண்டிருந்தார். உடனே தன்னுடைய சொந்தச் செலவில் ஒரு மின் விசிறியை வாங்கி வந்து அதை இயக்குவதைப் பற்றி அவரிடம் சொல்லிக்கொடுத்துவிட்டுப் போனார். பிறகொரு சமயம் வீட்டுக்குப் போனபோது மின் விசிறியைப் பார்த்துவிட்டு விசாரித்த காமராஜர், எத்தனையோ தாய்மார்கள் பனை ஓலை விசிறியால் தான் விசிறிக் கொள்ளும் பொழுது, உனக்கு மட்டும் வெங்கட்ராமன் மின்விசிறியை ஏன் வாங்கித் தந்தார்? முதலமைச்சரின் அம்மா என்பதால் தானே. இது கூட சலுகை இலஞ்சம் மாதிரித் தான் என்று சொல்லிவிட்டு அந்த மின்விசிறியை விருதுநகரில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்துக்கு எடுத்துக் கொண்டு போகச் சொல்லிவிட்டார்.

தன்னுடைய பெயரைப் பயன்படுத்தி தனது குடும்பத்தினர் எந்தத் தவறான காரியத்திலும் ஈடுபடக் கூடாதென காமராஜர் மிகவும் கண்டிப்பாக இருப்பார். இதனாலேயே தனது தாயாரை தான் முதல்வரான பிறகும் விருது நகரிலேயே தங்க வைத்தார். அம்மாவை சென்னைக்கு அழைத்து வந்தால், "அவர்களோடு கூட நாலு பேரு வருவான், அப்புறமா அம்மாவை பார்க்க , ஆத்தாவை பார்க்கன்னு பத்து பேரு வருவான். இங்கேயே டேரா போடுவான். இங்க இருக்குற டெலிபோனை யூஸ் பண்ணுவான், முதலமைச்சர் வீட்டிலிருந்து பேசறேன்னு சொல்லி அதிகாரிகளை மிரட்டுவான். எதுக்கு வம்புன்னு தான் அவங்களை விருதுநகர்லயே விட்டு வச்சிருக்கேன்" - எனத் தனது நண்பரிடம் கூறினாராம் காமராஜர்.

எளிமையாக வாழ்வதென்பது அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை சாத்தியமில்லாத விடயம். ஏனெனில், தலைவர்களை சுற்றியிருப்போர் செய்யும் செயல்களால் மேற்கொள்ளும் புகழ் புராணங்களால் வந்த பாதையை மறந்து தலையில் கனத்துடன் செயற்படும் தலைவர்களே அரசியலில் கோலோச்சுவதைக் காணமுடிகிறது. ஆனால், அப்படியானவர்கள் மக்கள் மனங்களில் நிற்பது அரிது. அவற்றையெல்லாம் விஞ்சும் வகையில் செயற்படும் உலக அரசியல்வாதிகளின் வரிசையில் இப்போது அநுரகுமார சேர்ந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. ஜனாதிபதி அநுர இனி எப்படி மாறுவார் என்பது தெரியாது என்றபோதிலும், எதிர்காலத்தை விட சில விடயங்களில் நிகழ்காலத்தை நோக்குவதே சிறந்தது.

ஜனாதிபதி அநுரகுமாரவை ஏனைய அரசியல் தலைவர்களுடன் ஒப்பிட்டு புகழ்வதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. அதுதான், அரசியல்வாதிகள் தங்களது மருத்துவ சிகிச்சைக்காக பெருமளவு அரச பணத்தை ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெற்ற விவகாரம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு நடந்திருக்கிறது.

சாதாரணமாக நோயாளி ஒருவர் ஜனாதிபதி நிதியத்திலிருந்து தனது சிகிச்சைக்குத் தேவையான பணத்தைப்பெறுவதற்கு படும் பாட்டை வார்த்தைகளில் சொல்லிவிட முடியாது. கடந்த காலங்களில் இப்படியான உதவிகளைப் பெறுவதற்குக் கூட இடைத்தரகர்கள் நோயாளர்களின் குடும்பங்களிடமிருந்து பணத்தைப் பெற்ற சம்பவங்கள் பதிவாகியிருந்தன. ஆனால், அரசியல்வாதிகள் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் விசேட சிகிச்சைகளைப் பெற அரச பணம் வாரியிறைக்கப்பட்டுள்ளமை இப்போது அம்பலமாகிக்கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து மட்டும் கடந்த 11 மாதங்களில் 300 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் பொதுமக்களின் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை உதவியாக 58 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் நிதியாக 32 கோடி ரூபாவும் மகாபொல புலமைப்பரிசில் நிதியத்தினூடாக 16 கோடி ரூபாவும் இளம் பராயத்தினரின் நலனோம்பு கைத்திட்டங்களுக்கு 15 கோடியும் பிக்குமாரின் கல்விக்காக மூன்று கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களில் ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகள் குறிப்பிட்ட சில துறைகளில் மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக்காலத்தில் ஆரம்ப வகுப்பு தொடக்கம் உயர்தரம் வரையான பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உள்ளிட்ட புதிய திட்டங்களின் மூலம் ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளார்.

ஜனாதிபதி நிதியத்தின் உதவிகளைப் பெற்ற அரசியல்வாதிகள் அந்த உதவுதொகைக்கான வியாக்கியானங்களைக் கூறிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், அவர்களில் பலர் உள்நாட்டின் அரச மருத்துவமனைகள் பக்கம் திரும்பியும் பார்க்காதவர்கள் என்பதுதான் இங்கு முக்கிய விடயம். அதனால்தான் ஜனாதிபதியின் தாயார் அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமையும் அவரைப் பார்க்க ஜனாதிபதியே எந்தப் பந்தாவுமின்றி சென்றமையும் பேசுபொருளாகியுள்ளது. ஜனாதிபதியே எளிமையான வகையில் செயற்படும்போது அவரது அமைச்சரவையும் அவரின் கீழுள்ள அதிகாரிகளும் அவ்வகையில்தான் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படுவதில் நியாயம் உண்டு. இதே இடத்தில் வேறொருவர் ஜனாதிபதியாக இருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை இங்கு விபரிக்கத் தேவையில்லை. ஜனாதிபதியின் இந்த முன்னுதாரணத்தை அரசியல்வாதிகள் மட்டுமல்ல, ஏனையோரும் மனதிற்கொள்தல் நல்லது.

## இன்றைய நாளில்...

- 1690 – யாழ்ப்பாணத்தில் நத்தார் இரவு ஆராதனைக்காகக் கூடியிருந்த சுமார் 300 கத்தோலிக்கர்கள் டச்சுப் படைகளினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.
- 1924 – அல்பேனியா குடியரசாகியது.
- 1951 – லிபியா இத்தாலியிடம் இருந்து விடுதலை பெற்றது. முதலாம் இத்ரிஸ் லிபிய மன்னராக முடிசூடினார்.
- 1968 – மூன்று விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்ற அப்பலோ 8 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தில் நுழைந்தது.
- 2005 – பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயமொன்றில் நத்தார் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது துணை இராணுவக் குழுக்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



**எம்.ஜி.ஆரின் மறைவு தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது**

# காலத்தை வென்ற கருணைக்கடல் எம்.ஜி.ஆர்.

மக்கள் திலகம் மறைந்து வருடங்கள் பல உருண்டோடிவிட்டன. இவரின் தோற்றம் 17.01.1917. இன்றும் கூட தென்னிந்தியாவில் மக்கள் திலகத்தின் தோற்றம், மறைவு நாள் போன்றவற்றை ஆடி மாதத்தில் அம்மனுக்கு கூழ் ஊற்றி விழா எடுப்பதைப்போல மாவட்டத்துக்கு மாவட்டம், நகரத்துக்கு நகரம், கிராமத்துக்குக் கிராமம் ஏன் தெருவுக்குத் தெருவென எம்.ஜி.ஆரின் பாடல்களைப் போட்டு அவர் நினைவு தினம் கொண்டாடப்படுவது எவரும் நினைத்துப் பார்க்க முடியாத ஆச்சரியமான அதிசயம்.

''சொல்லுதல் யார்க்கும் எளிய – அரியவராம்
சொல்லிய வண்ணம் செயல்''

என்ற வள்ளுவரின் வாக்குக்கு உதாரணமாக வாழ்ந்து சென்றிருக்கிறார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவரின் பாடலுக்கு மட்டுமல்ல,

''வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்களின் மனதில் நிற்பவர் யார்''

என்ற தனது பாடல் வரிகளுக்குத் தானே முன்னுதாரணமாக வாழ்ந்திருக்கிறார் எம்.ஜி.ஆர். நிறைய மனிதர்கள் வாழும்போதே செத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் திலகம் செத்த பிறகும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

''இறைவன் சாதாரண மக்களைப் படைக்க நாற்பது நாளாகின்றன. மகான்களை, தீர்க்கதரிசிகளைப் படைக்க நானூறு வருடங்களை எடுத்துக்கொள்கிறார்'' - இது ரிக் வேதத்திலுள்ள சுலோகம். அந்த ரீதியில் பார்த்தால் இந்த மனித சமுதாயம் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைப்போல் ஒருவரைப் பார்க்க இன்னும் நானூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். வட்டத்துக்கு தொடக்கம் எது, முடிவு எது என்று சொல்ல முடியாது. அப்படியே எம்.ஜி.ஆரின் வரலாற்றுக்கு தொடக்கமும் முடிவும் இல்லை.

எம்.ஜி.ஆரின் முதல் மனைவியின் பெயர் பார்கவி தங்கமணி. 1938ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். 1943ஆம் ஆண்டு சதானந்தவதி என்பவரை இரண்டாவது மனைவியாக எம்.ஜி.ஆர். மணந்தார். நோய் காரணமாக இரண்டு மனைவிகளும் இளமையிலேயே இறந்துவிட்டதால் நடிகை வீ.என்.ஜானகியை மூன்றாவது மனைவியாக எம்.ஜி.ஆர். மறுமணம் செய்துகொண்டார்.

கலை வித்தகர் எம்.ஜி.ஆர். கலையுலகில் செய்த சாதனைகள், பெற்ற பரிசுகள் பல. 'மலைக்கள்ளன்' – இந்திய அரசின் வெள்ளிப்பதக்கம் (1954), 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' – சினிமா ரசிகர் சங்கப் பரிசு (1956), 'நாடோடி மன்னன்' – சினிமாக்கதிர் சிறந்த இயக்குநர் பரிசு (1958), 'எங்க வீட்டுப் பிள்ளை' – சினிமா ரசிகர் சங்கப் பரிசு (1965), 'காவல்காரன்' – தமிழக அரசின் விருது (1967), 'குடியிருந்த கோயில்' – தமிழக அரசின் விருது (1968), 'நம் நாடு' – சினிமா ரசிகர் சங்கப் பரிசு (1969), 'அடிமைப்பெண்' – பிலிம்பேர் விருது (1969), 'எங்கள் தங்கம்' – சிறந்த இரண்டாவது படத்துக்கான தமிழக அரசின் விருது (1970), 'ரிக்ஷாக்காரன்' – பாரத் விருது (1971), 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' – தமிழக அரசின் விருது (1978) (இப்படம் எம்.ஜி.ஆரின் கடைசிப் படம்).

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மறைந்தாலும் இன்றும் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறார். மக்களுக்காகவே வாழ்ந்த எம்.ஜி.ஆர். கடைசி வரை மக்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்துகொண்டிருந்திருக்கிறார். தன்னைத் தேடி வருபவரை இருகைகூப்பி வரவேற்று தாய் உள்ளத்தோடு விசாரித்து உதவுவார். எம்.ஜி.ஆரின் வாழ்க்கையில் பல மறக்க முடியாத சம்பவங்கள் நடந்தன. எம்.ஜி.ஆரை நம்பியவர்கள் கெட்டது கிடையாது. எதிரிக்கும் உதவும் பொன்மனம் கொண்டவர் எம்.ஜி.ஆர். அதனால்தான் சைவப்பெரியார் கிருபானந்த வாரியார் இவரைப் 'பொன்மனச் செம்மல்' என்றார்.

இப்பெயர் இறுதிவரைக்கும் நீடித்து இன்றுவரை நிற்கிறது. ஏழைகளின் இதயத்தில் சிம்மாசனமாக உட்கார்ந்துகொண்டிருக்கும் எம்.ஜி.ஆர்., மனிதநேயத்தில் ஓர் இதயம். எம்.ஜி.ஆருக்கு 'புரட்சி நடிகர்' என்ற பட்டத்தைக் கொடுத்தவர் கலைஞர் மு.கருணாநிதி. 'புரட்சித் தலைவர்' என்று முதலில் எழுதியது 'தென்னகம்' பத்திரிகையில் கே.ஏ.கிருஷ்ணசாமி.

நூறு நாள் படம் ஓடி வெள்ளி விழா கொண்டாடி அதற்காக பலருக்கு கேடயம், மோதிரம் வழங்கியதில் முதல்வர் படம் 'நாடோடி மன்னன்'. ஒரு படத்துக்கு கதை கொண்டுபோய் அங்கு ரீ.வியில் ஒரு பெண்ணைப் பார்த்ததும் அதற்குப் பாத்திரப் படைப்பு அமைத்து படத்தில் நடிக்க வைத்து வெற்றி கண்ட முதல்வர் படம் 'உலகம் சுற்றும் வாலிபன்'. ஸ்லோ மோஷனில் தமிழகத்தில் படமெடுக்கச் சொன்னதில் முதல்வர் படம் 'கலையரசி'. துப்பாக்கியால் மகாத்மாவும் கென்னடியும் சுடப்பட்டு இறந்தார்கள். சுடப்பட்டு மூன்று குண்டுகள் பாய்ந்தும் பிழைத்தார் முதல்வர். நோயாளிகளை குறிப்பிட்ட நேரத்தில்தான் அரச மருத்துவமனையில் பார்க்க வசதியிருந்தும் குண்டடிபட்ட தன்னை எல்லா நேரத்திலும் பார்க்க அனுமதி வழங்கிய முதல்வர். ஒரு நூல் நிலையத்தை தனிப்பட்ட முறையில் வைத்திருந்ததில் முதல்வர் திரையுலகம் மக்களுக்கும் செம்மலுக்கும் ஒரு பாலமாக இருந்தது. காளமேகம் மேகத்தைத் தூதுவிட்டான். தமயந்தி அன்னத்தைத் தூதுவிட்டாள். நாரையை தூதுவிட்ட கதையுமுண்டு. ஆனால், எம் நாதர், திரை மூலந்தான் மக்களுக்குத் தூது விட்டார். அவர் அமைத்த ஆட்சிக்கு ஆதரவு தந்ததே வெள்ளித்திரை தான். அரசியல் உலகம் எப்படி என்று தெரியாது. ஆனால், திரையுலகம் அவரை இன்றுவரை மறக்கவில்லை. திரையில் மறையாத மாமனிதர் எம்.ஜி.ஆர். என்பதை மறுப்பவர் யாருமில்லை. படம் ஓட அவர் இன்றும் தேவைப்படுகிறார்.

அவரது படம் 'பெரிய இடத்துப்பெண்'. அதே கதைதான் 'சகலகலா வல்லவன்'. அவர் எடுக்க இருந்த படம் 'தூங்காதே தம்பி தூங்காதே', 'இணைந்த கைகள்'. அவர் கொடுத்த படத் தலைப்புகளே 'நல்லதை நாடு கேட்கும்', 'நல்லதை கேட்போம்'. அவரது செல்லப் பெயர் 'சின்னவர்'. அப்பெயரில் ஒரு படம். அவரது பாட்டு ''நாடு அதை நாடு....'' அப்படியும் ஒரு படம்.

எம்.ஜி.ஆருக்குப் பிடித்த உடைகள். சாதாரண காலங்களில் கைத்தறி வேட்டிகள்தான் அணிவார். புதிய கைத்தறி வேட்டியை ஒரு தடவைதான் அணிவார். கல்யாணம் மற்றும் மங்கள நிகழ்ச்சிகளில் பட்டுவேட்டி. இளம் மஞ்சள் நிற உடைகள் பிடிக்கும். எம்.ஜி.ஆர். சின்ன வயதாக இருக்கும்போது அவரின் அன்னையார் சத்தியபாமா மூகாம்பிகை கோயிலுக்கு அழைத்துச்செல்வது வழக்கம். எம்.ஜி.ஆரின் அம்மா இறந்த பிறகு அவருக்கு தன் இராமாவரம் தோட்டத்தில் பெரிய கோயில் கட்டி தினமும் வழிபட்டு வந்தார். இது தவிர, மூகாம்பிகை கோயிலுக்கு மாதா மாதம் சென்று வந்துகொண்டிருந்தார். இறுதி வரை இவர் வில்லனாக நடித்த படங்கள் 'என் தங்கை', 'பணக்காரி', 'அந்தமான் கைதி'. இம்மூன்று படங்களிலும் சமுதாயத்தைத் திருத்தும் வில்லனாக நடித்துள்ளார். அதற்குப் பிறகு வில்லனாக நடிக்கவில்லை.

எம்.ஜி.ஆர். மேடைகளில் பேசும்போது தம் ரசிகர்களை ''இரத்தத்தின் இரத்தமே'' என்று அழைப்பார். அதற்குக் காரணம், 1967இல் குண்டடிபட்டு எம்.ஜி.ஆர். சிகிச்சையில் இருந்தபோது ஏராளமான ரசிகர்கள் இரத்தம் கொடுத்திருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். இறந்த செய்தியை அமெரிக்காவில் 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டது. தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கு அமெரிக்க அரசு தனது அனுதாபங்களை வெளியிட்டது. அறிஞர் அண்ணா இறந்தபோது 1969இல் இறுதிச்சடங்கு ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் 18 இலட்சம் பேர். எம்.ஜி.ஆரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்கள் 28 இலட்சம் பேர். இவர் நடித்த படங்களின் எண்ணிக்கை 136.

1936இல் 'சதிலீலாவதி' முதல் இறுதிப்படம் 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' (1978) வரை திரையுலகில் ஜொலித்தார்.

**கலாபூஷணம்**
**'கல்லொளுவை பாரிஸ்'**














## நக்கல் நமசிவாயம்

குரங்குகளை மலடாக்கும் திட்டம் அமுலாகுதாம்... யாரைக் கேட்டு இதை செய்யுறாங்கள்?





இலங்கையின் முதல் தர வங்கியும் அரச வங்கியுமான இலங்கை வங்கியின் நவீனமயப்படுத்தப்பட்ட கிளையானது நேற்று மட்டக்களப்பு, மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவில் திறந்துவைக்கப்பட்டது. வவுணதீவு சந்திக்கு அருகில் இந்த நவீனமயப்ப டுத்தப்பட்ட வங்கிக் கிளையானது வங்கியின் முகாமையாளர் தா.பிரியதர்சன் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் கிளைச் செயற்பாடுகளுக்கான பிரதிப் பொது முகாமையாளர் எச்.பிரியான் சில்வா,உதவிச் சேவைக்கான பிரதிப் பொது முகாமையாளர் திருமதி பிரியந்தி விஜயசேகர,மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் திருமதி என்.சத்தியானந்தி, மண்முனை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அனட்,இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் குமுது சமிந்த மகவத்த,வவுணதீவு பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி வரதராஜன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

படங்கள்:- வீரமுனை செய்தியாளர்

# ஹட்டன் பஸ் விபத்தில் காயமடைந்தவர்களை நேரில் சந்தித்த திகாம்பரம் எம்.பி.



ஹட்டன், மல்லியப்பூ சந்தியில் கடந்த சனிக்கிழமை (21) இடம்பெற்ற பஸ் விபத்தில் படுகாயமடைந்து டிக்கோயா - கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றவர்களை தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (22) சென்று பார்வையிட்டார்.

இதன்போது வைத்தியர் ஏ.அருள்குமரனிடம் விபரங்களைக் கேட்டறிந்ததோடு, விபத்தில் காயமடைந்து சிகிச்சைபெற்று வருபவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# ஹட்டனில் அதிகரித்துள்ள மரக்கறி விலை! நுகர்வோர் கவலை

(மனுர சுதத் செல்லஹேவா - ஹட்டன்)

நத்தார் பண்டிகை நெருங்கும்போது காய்கறிகளின் விலையும் அதிகரித்து வருவதாக ஹட்டன் பிரதேச நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் மக்கள்,

நத்தார் பண்டிகை நெருங்கிவரும் நிலையில், ஹட்டன் பகுதியில் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

தற்போது இப்பகுதியில் ஒரு கிலோ கறிமிளகாய் 800 முதல் 1000 ரூபா, ஒரு கிலோ போஞ்சி 600 முதல் 650 ரூபா, கத்தரிக்காய் கிலோ 500 முதல் 600 ரூபா, தக்காளி 450 முதல் 500 ரூபா, பச்சை மிளகாய் கிலோ 1,300 முதல் 1,400 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக குறித்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமைகள் தொடர்பில் ஹட்டன் நகர மரக்கறி வியாபாரிகள் சிலரிடம் கேட்டபோது, மரக்கறிகளின் மொத்த விலை அதிகரிப்புக் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# ஹட்டன் இ.போ.ச. பஸ் தரிப்பிடத்தில் 'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டம்

(மனுர சுதத் செல்லஹேவா - ஹட்டன்)

ஹட்டன் இ.போ.ச. பஸ் தரிப்பிடத்தில் புகை பிடித்தல், வெற்றிலை துப்புதல் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுதல் போன்றவற்றை முற்றாகத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின்கீழ் இந்த பஸ் நிலையத்தை சுத்தம் செய்து வர்ணம் பூச நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் இங்கு சுவரொட்டிகள் ஒட்டுதல், வெற்றிலை துப்புதல், புகைத்தல் போன்றவற்றை முற்றாகத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் நிலையத்தை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் வகையில் அனைவரதும் ஆதரவை எதிர்பார்க்கிறோம் என்று அதிகாரி மேலும் தெரிவித்தார்.



மாத்தளை மேர்க்ஸ் சமூக சேவை அமைப்பும் புத்தளம் மேஸிங் லங்கா நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நேற்று முன்தினம் (22) மாத்தளை ,உல்பதபிட்டிய முஸ்தபா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. (யட்டவத்த செய்தியாளர்)

# கண்டியில் போக்குவரத்து முனையத்தை நிர்மாணிக்க ஏற்பாடு

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டியில் பல்வகை போக்குவரத்து முனையத்தை (KMTT) நிர்மாணிப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கண்டியில் தெரிவித்தார்.

இப்பணிகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக முடங்கிக் கிடப்பதால் பஸ் ஓட்டுநர்கள் மட்டுமன்றி, பயணிகளும் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இந்தப் போக்குவரத்து முனையத்தை நிர்மாணிக்கும் அதேவேளை, கண்டி குட்ஷெட் பஸ் தரிப்பிடம், கண்டி ரயில் நிலையம் மற்றும் ஏனைய போக்குவரத்து நிலையங்கள் என்பனவும் புதுப்பொலிவுடன் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

பயணிகள் முனையத்தின் பணிகள் மூன்று மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

# கண்டி முஸ்லிம் வித்தியாலயத்தில் புதிய கட்டடத் திறப்பு விழா



(எஸ்.கணேசன்)

பாரத் அருள்சாமியின் வேண்டுகோளுக்கமைய குவைத் அரசின் அல்-நஜாத் அமைப்பு மற்றும் அல்-நூர் தொண்டு நிறுவனம் என்பவற்றின் நிதியுதவியில் கண்டி, கட்டுகஸ்தோட்டை,எண்டாறுதென்ன முஸ்லிம் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

சுமார் பத்து மில்லியனுக்கும் அதிகமான செலவில் கட்டப்பட்ட இப்பாடசாலைக் கட்டடத் தொகுதியானது சகல வசதிகளும் கொண்ட நான்கு வகுப்பறைகளையும் காரியாலயத்தையும் கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்ட பாரத் அருள்சாமி உரையாற்றுகையில்,

மிக நீண்டகாலமாக கட்டிட வசதிகளின்றிக் காணப்பட்ட மாணவர்களுக்குப் புதிய கட்டிடத் தொகுதியானது அவர்களுடைய கல்விச் செயற்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக இருக்குமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ''கல்வியின் மூலமாகவே சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். பாடசாலை அதிபரும் இந்த ஊர் மக்களும் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கமைவாக அல்-நூர் அறக்கட்டளையினூடாக இவ்வேலைத் திட்டத்தை நிறைவுசெய்யக் கிடைத்தமை எனது பெரும் பாக்கியமாகும்.

தொடர்ந்து நாம் இன்னும் பல பாடசாலைகளை பெருந்தோட்டப் பகுதிகளிலும் சிறுபான்மை மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலும் நிறுவவுள்ளோம். மேலும், அவர்களின் கற்றல் திறனை அதிகரிக்க பல வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம்.

அரசியல் சார்ந்த மாற்றங்கள் எதுவாக இருப்பினும் எமது சேவைகளில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. ஏனெனில், சேவை செய்வதற்கு அதற்கான உறுதியும் மனமும் இருந்தால் நிச்சயம் நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை எம்மக்களுக்குள் கொண்டுசெல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

எனவே, இத்திட்டத்தை நிறைவுசெய்ய குறித்த அமைப்பின் ஸ்தாபகத் தலைவர்களான ரகு இந்திரகுமார், ரிப்கி மற்றும் அலியாருக்கும் எனது விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இப்பாடசாலையின் அதிபர் சித்திக், உப அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் என அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' - என்றார்.

இந்நிகழ்வில் குவைத் அரசின் அல்-நஜாத் அமைப்பின் தலைவர் ஷேக் அப்துல்லா அலோபாய்டிலி, அல்-நூர் அறக்கட்டளைத் தலைவர் அலியார், பாடசாலை அதிபர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஷில்பாபிஷேக - 2024 கண்டியில்

# மர வேலைப்பாடுகளிலான கைவினை பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

(ஜே.எம்.ஹாபீஸ்)

ஷில்பாபிஷேக - 2024 மர வேலைப்பாடுகளிலான கைவினைப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் (19) கண்டி சிட்டி சென்டர் வளாகத்தில் நடைபெற்றது.

மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சரிதா இலங்ககோன் தலைமையில் இடம்பெற்றது.

18-40 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளை வழி காட்டும் வகையில், போட்டியொன்றும் நடத்தப்பட்டது. அங்கு அவர்களின் படைப்புகள் மதிப்பிடப்பட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ஊக்குவிப்புகள் இடம்பெற்றன. இதன் கீழ் மூன்று போட்டிப் பிரிவுகளில் திறமையான 15 கலைஞர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.









இதன்போது,மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புத் திணைக்களப் பணிப்பாளர் உதார கோன்சிவத்த, பிரதி பணிப்பாளர்களான ஜெயஸ்ரீனி அமரக்கோன், டி.கே.ஜயசிங்க, கண்டி மேலதிக மாவட்ட செயலாளர் லலித் அதம்பாவல, அரச அதிகாரிகள் மற்றும் கைத்தொழிலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வாகனச் சாரதிகள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்

## அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு



நாட்டின் சட்டதிட்டங்கள் மக்களுக்காக - மக்களின் நலனுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே சம்பந்தப்பட்ட தரப்பினர் அவற்றை சரியாக பயன்படுத்தி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்படுவார்களென எதிர்ப்பார்க்கிறேன்" என அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

ஹட்டனிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ்ஸொன்று அண்மையில் மல்லியப்பு சந்திக்கருகில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டு கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

"இதுபோன்ற விபத்துகள் இங்கு அடிக்கடி இடம்பெறுவது வாடிக்கையாகிவிட்டது. இதனால் கஷ்டப்படுவது எமது மக்களாக மட்டுமே இருக்கிறார்கள். உயிரிழப்புகள், காயங்களுக்குள்ளானவர்கலளென அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். பஸ் சாரதியின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து நேர்ந்ததென பரவலாகப் பேசப்படுகிறது. அது உண்மையாக இருப்பின் அந்தச் சாரதிக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான பொதுப்போக்குவரத்துச் சேவைகளை வழங்குபவர்களும் எதிர்காலங்களில் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

நாட்டின் சட்டதிட்டங்கள் மக்களுக்காக - மக்களின் நலனுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே சம்பந்தப்பட்ட தரப்பினர் அவற்றை சரியாக பயன்படுத்தி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்படுவார்களென எதிர்ப்பார்க்கிறேன்" - என்றார்.

# கண்டி மாவட்டத்துக்கான பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் நியமனம்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி மாவட்டத்துக்கு பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சு நியமித்துள்ளது. அதன்படி கண்டி மாவட்டத்திலுள்ள உடுநுவர மற்றும் யட்டிநுவர பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவராக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹரிஸ்பத்துவ தும்பனை மற்றும் கரலியத்த ஆகிய பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

பஸ்பாகே கோரள மற்றும் கங்க இஹல கோரள பிரதேச செயலக அதிகார எல்லைக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் துஷாரி ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பூஜாபிட்டிய மற்றும் அக்குறணை ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரியாஸ் பாரூக் நியமிக்கப்பட்டுள்ளதுடன், கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எவ்.எம்.பஸ்நாயக்க மினிபே, உடதும்பர, மெததும்பர, பன்வில, பாததும்பர ஆகிய பிரிவுகளுக்கான குழுக்களின் தலைவராகவும் தெல்தோட்டை மற்றும் பாத்தஹேவாஹெட்டவுக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ணவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தொளுவ மற்றும் உடபலாத்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் பசீர்ன் பாரிஸும் குண்டசாலை மற்றும் கங்கவட்ட கோரல பிரிவின் குழுக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் தனுர திஸாநாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், கண்டி மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்நியமனம் பற்றி அறிவித்த அதேவேளை, மாவட்டத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் அந்தந்தப் பிரதேச செயலகக் குழுக்களின் தலைவர்களினது தலைமையில் நடைபெறவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குளவிக்கூட்டை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை



பதுளை - மஹியங்கனை பிரதான வீதி பதுளை பிஹிலகடை சந்தியிலுள்ள மின்கம்பமொன்றில் பாரிய குளவிக்கூடொன்று காணப்படுவதால் குறித்த குளவிக்கூட்டை அகற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த வீதியினூடாகவே பதுளையில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றுக்கு மாணவர்கள் செல்வதாகவும் அவ்விடத்தில் முச்சக்கரவண்டி தரிப்பிடமொன்றும் புடவை வியாபார நிலையங்களும் ஏனைய வியாபார நிலையங்களும் காணப்படுவதனால் அவ்வியாபார நிலையங்களுக்குச் செல்பவர்கள் மற்றும் அவ்வீதியில் பயணிக்கும் பாதசாரிகள் பாரிய அச்சத்துடனேயே அவ்விடத்தைக் கடந்து செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி குறித்த குளவிக்கூட்டை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சர்வமதக் குழு உறுப்பினர்கள் பரிசுத்த பவுல் தேவாலயத்துக்கு விஜயம்



(எம்.ஏ.அமீனுல்லா)

'தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் மூலம் வளமான நாடு' - என்ற கருப்பொருளுடன் கண்டி மாவட்ட சர்வமதக் குழு உறுப்பினர்கள் அண்மையில் (18) கண்டி பரிசுத்த பவுல் தேவாலயத்துக்குச் சென்று அங்கு சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

பௌத்த, கத்தோலிக்க, இந்து மற்றும் இஸ்லாமிய மதகுருமார்கள் அடங்கிய குழுவினரே இவ்வாறு தேவாலயத்துக்குச் சென்றபோது, வணக்கத்துக்குரிய அந்தோனி பெர்னாண்டோவால் வரவேற்கப்பட்டனர். அங்கு நடத்தப்படும் சமய நிகழ்ச்சிகள் மற்றும் ஆராதனைகள் குறித்து வண. அந்தோனி பெர்னாண்டோ விளக்கமளித்தார்.

இதனையடுத்து பிற மதத்தினரை உள்ளடக்கிய கிறிஸ்தவப் பாடல்களை ரோஹண, ராஜபக்ஷ உள்ளிட்ட தேவாலயப் பாடகர் குழுவினர் பாடினர். அனைத்து மதத்தினரும் பரஸ்பர புரிந்துணர்வுடன் மிகவும் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றனரென தந்தை அந்தோனி பெர்னாண்டோ தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவை மற்றும் கண்டி மாவட்ட சர்வமதக் குழு இணைந்து ஏற்பாடுசெய்த இந்நிகழ்ச்சியின் கீழ், கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்களும் இணைந்து நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவது ஒரு வரலாற்று நிகழ்வாகுமென சர்வமதக் குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவரான காமினி ஜயவீர தெரிவித்தார். உலக பாரம்பரிய நகரமான கண்டியின் வரலாற்றுக் கட்டிடங்களில் ஒன்றான புனித பவுல் தேவாலயம் 150 வருடங்களுக்கும் மேலான பழைமை வாய்ந்ததெனவும் இந்நாட்டின் அனைத்து இன, மதத்தினரும் நாட்டின் சமய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஒற்றுமையாக வாழ வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



மத்திய மாகாணத்திலுள்ள 42 உள்ளூராட்சி அமைப்புகளின் ஊடக மற்றும் தகவல் அதிகாரிகளுக்கு மத்திய மாகாண சபை ஊடக அலகு மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையில் இருநாள் ஊடகப் பயிற்சிப் பட்டறையொன்று நேற்று முன்தினம் (22) மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (ஜே.எம்.ஹாபீஸ்)

# வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை இரத்துச்செய்யக் கோரும் மக்கள்!





(பு.கஜிந்தன்)

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி செந்தூரனின் இடமாற்றத்தை இரத்துச்செய்யுமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பவானந்தராஜாவுக்கும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் மற்றும் சமூகமட்ட அமைப்பினருக்குமிடையே விசேட கலந்துரையாடலொன்று நேற்று (23) வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின்போது மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலை தரத்தில் காணப்படுகின்றது. ஆனால், அதற்குரிய ஆளணி வசதிகள் காணப்படுவதில்லை. இருப்பினும் கட்டட வசதிகள் தாராளமாக உள்ளன.

கடந்த காலங்களில் 24 மணிநேர மருத்துவ வசதிகளும் சிகிச்சைகளும் காணப்பட்டன. ஆனால், பின்னர் அவையெல்லாம் இடைநிறுத்தப் பட்டன. இருப்பினும், தற்போது கடமையில் இருக்கின்ற பொறுப்பு வைத்திய அதிகாரி செந்தூரனின் முயற்சியாலேயே மீண்டும் நோயாளர் விடுதி இயக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையை பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்துகின்றனர். 24 மணிநேர மருத்துவ வசதி இல்லாத காரணத்தால் மக்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கும் செல்லவேண்டி ஏற்படுகிறது. அந்த வைத்தியசாலை விடுதிகளில் கட்டில் தட்டுப்பாடுகள், இடவசதி பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் எங்களது வைத்தியசாலையில் 24 மணிநேர மருத்துவ சேவையை ஆரம்பித்தால் மக்கள் அலைச்சலில்லாமல் இங்கேயே சேவையைப் பெறமுடியும். அத்துடன், அந்த வைத்தியசாலைக்கும் வேலைச்சுமை குறையும்.

புதிதாக பதவியேற்றுள்ள பொறுப்பு வைத்திய அதிகாரி எமது வைத்தியசாலைக்கு வருகை தந்து ஒன்றரை வருடங்களேயாகின்றன. ஆனால், அவர் அந்தக் காலப்பகுதிக்குள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளார். இன்னும் சிறிதுகாலம் அவர் எமது வைத்தியசாலையில் வேலை செய்தால், எமது வைத்தியசாலையின் சேவைகளை முழுமைப்படுத்திவிடுவார். அதன்பின்னர் யார் வைத்திய பொறுப்பதிகாரியாக வந்தாலும் அந்தச் சேவைகளை இலகுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மக்களுக்கு சேவை செய்வதற்கே அனைத்து அரச திணைக்களங்களும் அரச அதிகாரிகளும் உள்ளனர். எனவே, மக்களாகிய எமது கோரிக்கைகளை செவிமடுத்து எமது வைத்தியசாலையின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் முகமாக குறித்த வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை இடைநிறுத்தி அல்லது தள்ளிப்போட்டு மக்களது நலனிலும் வைத்தியசாலையின் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்த வேண்டும் - என்றனர்.

அத்துடன், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தனர். மக்களின் கோரிக்கைகளை செவிமடுத்து பாராளுமன்ற உறுப்பினர், அவர்களது கோரிக்கை தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்தாலோசிப்பதாக உறுதியளித்துள்ளார்.

# ஹாஷிம் உமர் பௌண்டேசனால் ஊடகர் அன்னலட்சுமிக்கு கௌரவம்











சாஹித்ய ரத்னா விருது பெற்ற மூத்த பெண் ஊடகவியலாளர் அன்னலட்சுமி இராஜதுரையை ஹாஷிம் உமர் பௌண்டேசன் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தது.

ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் கொள்ளுப்பிட்டியில் நேற்றுமுன்தினம் (22) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் ஹாஷிம் உமரின் பாரியார், அன்னலட்சுமி இராஜதுரையை பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய நாளிதழ்களின் ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அதிபர்களின்றி இயங்கும் 46 பாடசாலைகள்

கொழும்பில் ரோயல் கல்லூரி உட்பட ஏழு பாடசாலைகள் தற்போது அதிபர்களின்றி இயங்குவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேவி பாலிகா, பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரி மொரட்டுவை, செயின்ட் போல்ஸ், இந்துக் கல்லூரி, இசிபத்தான கல்லூரி, லும்பினி மற்றும் பிலியந்தலை எம்.எம்.வி. ஆகியவை கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பாடசாலைகளிலும் அதிபர்களின்றி இயங்குகின்றன.

இதேவேளை, கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த மொத்தம் 46 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லாமல் இருப்பது தெரியவந்தது. பண்டாரநாயக்க மகா வித்தியாலயம் ,கம்பஹா-சங்கமித்தா கல்லூரி, தர்மசோகா, தேவானந்தா வித்தியாலயம், புனித தோமஸ் சிலாபம், ஜோசப் வாஸ் கல்லூரி, ராஜபக்ஷ வித்தியாலயம் வீரகெட்டிய, அநுராதபுரம் ம.ம.வி. மற்றும் இன்னும் சில பாடசாலைகள் இவ்வாறு அதிபர்களின்றி இயங்குகின்றன.

குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்களை நிரப்ப 2024 டிசம்பர் 31க்கு முன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹாவில் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் காயம்

கம்பஹா பிரதேசத்தில் வீரகுல என்ற இடத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் நபரொருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மருந்து விற்பனை அனுமதி உரிமம் குறித்து பாராளுமன்றில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு

## தெளிவுபடுத்தலை வழங்கியது Divasa Pharma Limited

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) ஒழுங்குமுறைகள் அனைத்துக்கும் இணங்குவதை Divasa Pharma உறுதிபடக் கூறியுள்ளது.

மருந்துகளை மொத்தமாக விற்பனை செய்வதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் (National Medicines Regulatory Authority -NMRA) 2018 ஒகஸ்ட் 18 அன்று விநியோகிக்கப்பட்டு, இன்றுவரை தொடர்ச்சியாக புதுப்பிக் கப்பட்டு வரப்பட்டுள்ள அனுமதி உரிமம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து, பாராளுமன்றத் தில் அண்மையில் எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் சரியான விபரங்களின் தெளிவுபடுத்தலை Divasa Pharma Limited வழங்கியுள்ளது.

அதற்கமைவாக, கொவிட்-19 PCR மற்றும் RAT தொகுதிகள் அடங்கலாக George Steuart Health (Pvt) Limited நிறுவனத்தின் தயாரிப்புகள் சிலவற்றுக்கு உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தராக Divasa Pharma Ltd இயங்கிவருகின்றது. அந்த வகையில், சுகாதார அமைச்சால் விடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் கீழ், அரச சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்கள் உட்பட உள்நாட்டுச் சந்தையில் கொவிட்-19 PCR மற்றும் RAT தொகுதிகளை Divasa Pharma சட்டபூர்வமாக சந்தைப்படுத்தி, விற்பனை செய்துள்ளது.

இந்த PCR மற்றும் RAT தொகுதிகள் NMRAஆல் நிர்ணயிக்கப்பட்ட அல்லது அதற்கும் குறைவான விலைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

Divasa Pharma Ltd எச்சமயத்திலும் எந்தவொரு PCR அல்லது RAT தொகுதிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்திருக்கவில்லை. அரச சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்களுக்கு இவற்றை விற்பனை செய்தபோது, அத்தகைய தயாரிப்புகளின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு விநியோகத்தராக அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்து, வெளிப்படையான விலைமனுக்கோரல் கொள்வனவு நடைமுறையில் Divasa Pharma பங்குபற்றியுள்ளது.

Divasa Pharma Ltd, 2012இல் ஒரு நிறுவனமாக கூட்டிணைப்புச் செய்யப்பட்டுள்ளது. தனது சொந்த மருந்து வகை மற்றும் நோய் கண்டறியும் மருந்து தொகுதிகளை இறக்குமதி செய்து, விநியோகிப்பதற்கான செல்லுபடியான NMRA மற்றும் இறக்குமதி அனுமதி உரிமங்களை Divasa Pharma கொண்டுள்ளது.

இந்த அனுமதி உரிமங்கள் NMRA இன் அனைத்து தேவைப்பாடுகளுக்கும் அமைவாக, பெறப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.

# கண்டி மாவட்டத்தில் பெரும்போகத்துக்கான உரத் தேவைப்பாடுகள் முழுமையாக நிறைவு

## தேசிய உரத் தலைமை அலுவலகம் அறிவிப்பு



கண்டி மாவட்டத்தில் பெரும் போகத்துக்கான சகல உரத் தேவைப்பாடுகளும் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாக தேசிய உர தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

11 ஆயிரத்து 791 ஹெக்டேயரில் இந்த போகத்தில் நெல் உற்பத்தி செய்யப்படுவதாகவும் தலைமை அலுவலகத்தின் பிரதி பணிப்பாளர் டபிள்யு.எம்.டபிள்யு.ஜி.ஆனந்த குறிப்பிட்டார்.

கண்டி மாவட்டத்தில் நெல் விவசாயத்துக்காக யூரியா பசளை 2,710 மெற்றிக் தொன் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் ரீ.எஸ்பி. வகை உரம் 734 மெற்றிக் தொன் மற்றும் MOP 975 மெற்றிக் தொன் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அரச உரக் கம்பனி மற்றும் 11 நிறுவனங்கள் கண்டி மாவட்டத்தில் உர விநியோகத்துக்காக முன்வந்துள்ளன.

# போலி நாணயத்தாள்களுடன் மாணவர்கள் நால்வர் கைது

5,000 ரூபா போலி நாணயத்தாள்களை வைத்திருந்த நான்கு பாடசாலை மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

திகன பிரதேசத்தைச் சேர்ந்த விற்பனை நிலையமொன்றின் உரிமையாளர் ஒருவரால் தெல்தெனிய பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் மாணவர்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நான்கு மாணவர்களும் திகன பிரதேசத்திலுள்ள விற்பனை நிலையமொன்றுக்குச் சென்று பொருட்களைக் கொள்வனவுசெய்ய முயன்றுள்ளனர்.

மாணவர்களிடமிருக்கும் நாணயத்தாள்கள் போலியானவை என அறிந்துகொண்ட குறித்த விற்பனை நிலையத்தின் உரிமையாளர் இது தொடர்பில் உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நான்கு மாணவர்களையும் கைதுசெய்ததுடன், அவர்களிடமிருந்து 57 போலி நாணயத்தாள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு மாணவர்களும் 15 முதல் 16 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

நெருங்கிய நபரொருவர் இந்த நாணயத்தாள் களை தங்களுக்குக் கொடுத்ததாக மாணவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் அடையாளம் காணப்பட்ட போதிலும் அவர் தலைமறைவாகியுள்ளதாகவும் சந்தேக நபரை கைதுசெய்ய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மீகொட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்; மேலும் மூன்று சந்தேகநபர்கள் கைது!

மீகொட, நாகஹவத்தையில் டிசம்பர் 14ஆம் திகதி காரில் பயணித்த நபரொருவரை சுட்டுக்கொன்ற சம்பவம் தொடர்பில் மேலும் மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹோமாகம மற்றும் மீகொட பொலிஸ் பிரிவுகளில் நேற்று முன்தினம் (22) மாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 22, 26 மற்றும் 38 வயதுகளையுடைய பாதுக்க மற்றும் மீகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

துப்பாக்கிச்சூடு தொடர்பான விசாரணைகளை மீகொட பொலிஸார் மற்றும் மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் டிசம்பர் 19 அன்று, பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட இருவரை கைதுசெய்ததுடன், அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் மேலும் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் குற்றத்தின்போது துப்பாக்கிச்சூடு நடத்திய நபருடன் சென்றதாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மற்ற இருவரும் கொலைக்கு உதவி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரும் மீகொட பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

### நாணய மாற்று விதம் (23.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 179.3665 | 188.8176 |
| கனேடியன் டொலர் | 200.5270 | 209.2947 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.8239 | 41.4811 |
| யூரோ | 300.7847 | 313.3850 |
| ஜப்பான் யென் | 1.8432 | 1.9183 |
| சிங்கப்பூர் டொலர் | 212.2464 | 222.1473 |
| ஸ்ரேலிங் பவுண் | 363.1653 | 377.3275 |
| சுவிஸ் பிராங் | 321.5768 | 337.2458 |
| ஐ.அ. டொலர் | 289.7312 | 298.5262 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 777.6511 |
| குவைட் | குவைட் தினார் | 951.7472 |
| ஓமான் | ஓமான் ரியால் | 761.5016 |
| கட்டார் | கட்டார் ரியால் | 80.3923 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 78.0893 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.8145 |

# நீர்கொழும்பில் களைகட்டும் நத்தார் வியாபாரம்







(நீர்கொழும்பு நிருபர்)

சின்னரோம் என்று அழைக்கப்படும் நீர்கொழும்பு நகரில் நத்தார் வியாபாரம் களைகட்டியுள்ளது.



நகரின் வர்த்தக நிலையங்களிலும் வாராந்த சந்தைகளிலும் நடைபாதை வியாபார நிலையங்களிலும் நத்தாருக்குத் தேவையான அலங்காரப் பொருட்கள், உடைகள், விளையாட்டுப் பொருட்கள், பரிசுப் பொருட்கள் எனப் பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இரவு சந்தைப் பகுதியில் அதிக எண்ணிக்கையான மக்கள் நடைபாதைகளில் வியாபாரிகளிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதைக் காணக்கூடியதாக இருந்தது. நகரின் பல இடங்களிலும் இயேசு பாலன் கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வியாபாரம் தொடர்பில் வியாபாரிகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கருத்து தெரிவித்துள்ளனர். சிலர் வியாபாரம் நன்றாக இருப்பதாகவும் இன்னும் சிலர் குறைவான வியாபாரமே நடைபெறுவதாகவும் தெரிவித்தனர்.

# சாய்ந்தமருதில் சுகாதாரத்துறையினர் திடீர் களப் பரிசோதனை



**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரிவுகளில் உணவுப்பண்டங்கள் விற்பனைசெய்யும் நிலையங்களில் திடீர் களப் பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் அடங்கிய குழுவினர் மேற்கொண்ட இந்தத் திடீர் பரிசோதனையின்போது முறையற்ற வகையில் உணவு தயாரிக்கும் மூன்று நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்தவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த திடீர் களப் பரிசோதனையின்போது மூன்று ஹோட்டல்கள், ஓர் உணவகம், மரக்கறி விற்பனை நிலையங்கள் மற்றும் பழக்கடை போன்றனவும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தவும் ஆரோக்கியத்தைக் கவனத்திற்கொண்டும் எங்கள் பணி என்றும் தொடருமென சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தெரிவித்தார்.

# பாலின உணர்திறனை மேம்படுத்துவது தொடர்பான செயலமர்வு



**(சீனக்குடா செய்தியாளர்)**

'பாலின உணர்திறனை மேம்படுத்தல்' என்ற தொனிப்பொருளில் திருகோணமலை மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட செயலமர்வொன்று திருகோணமலையிலுள்ள தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (22) இடம்பெற்றது.

சட்ட அமுலாக்கம் தொடர்பாக பாலின அடிப்படையிலான வன்முறைக்கான அணுகல் சேவையை மேம்படுத்துதல் மற்றும் அதற்கான ஆதரவு அமைப்பை வலுப்படுத்துதல் தொடர்பான உள்ளடக்கங்களை இந்தச் செயலமர்வு கொண்டிருந்தது.

இதனை, E- wing எனப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்களை மேம்படுத்துவதற்கான திருகோணமலை சுயாதீன மையம் ஏற்பாடு செய்திருந்தது. குறித்த செயலமர்வில், மாவட்டத்திலுள்ள ஒன்பது பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த 31 பொலிஸ் உத்தியோகத்தர்களும் நான்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன் வளவாளராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி கலந்துகொண்டார். இதன்போது, பாலின சமத்துவம், பெண்களின் அதிகாரம், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி, சுகாதாரம், அரசியல், பொருளாதார முடிவெடுக்கும் செயல்முறைகளில் சமஉரிமை, பெண் சமத்துவம் தொடர்பான புதிய சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தல், பெண்களை இலக்காகக்கொண்ட தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளை ஒழித்தல், பெண்கள் எதிர்நோக்கும் பாலின ரீதியான சம்பவங்கள் மற்றும் அதனைத் தடுக்கவேண்டிய அணுகுமுறைகள் உட்பட பல விடயங்கள் வளவாளரால் தெளிவூட்டப்பட்டன.

# அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரின் 172ஆவது ஜெயந்தி தின விழா





**(கல்லடி செய்தியாளர்)**

அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரின் 172ஆவது ஜெயந்தி தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (22) மட்டக்களப்பு,திருக்கோயிலில் ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனில் இடம்பெற்றது.

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு கிளை பொது முகாமையாளர் நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட அதிதியாக ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் தெற்காசியக் கிளையின் தலைவர் சுவாமி சுவத்மானந்தா ஜீ மகராஜ் கலந்துகொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

மங்களாராத்தியுடன் ஆரம்பமான ஜெயந்தி தின நிகழ்வில் திருப்பள்ளியெழுச்சி, பக்திப் பாடல்கள், பஜனைப் பாடல்கள், ஹோமம், சிறப்பு சொற்பொழிவு, ஆரத்தி என்பன இடம்பெற்றன.இதன்போது ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு கிளையின் உதவிப் பொது முகாமையாளர், நிர்வாகிகள், மாணவர்கள் மற்றும் பக்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டு அன்னை சாரதா தேவியரின் அருள் ஆசியைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.







***பாராளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர் வைத்தியர் ஹில்மி மஹ்ரூப் ஏற்பாடு செய்த வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் சனிக்கிழமை (21) கிண்ணியாவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.***

# மோஜோ கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்



**(மருதமுனை மேலதிக செய்தியாளர்)**

மொபைல் ஜேர்னலிஸம் ஊடக கற்கைநெறியின் சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள அமெரிக்கன் கோர்னரில் பயிற்றுவிப்பாளர் கேஷாயினி எட்மன்ட் தலைமையில் சனிக்கிழமை (21) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராசிரியர் பாரதி கென்னடி, அமெரிக்கன் கோர்னர் ஒருங்கிணைப்பாளர் சுஜிராஜ் நடராசா மற்றும் அமெரிக்கன் கோர்னரின் சக ஊழியர்கள் உனப் பலர் கலந்துகொண்டனர்.

இக்கற்கைநெறியைப் பூர்த்திசெய்வதற்காக இறுதியில் ஒவ்வொரு மாணவிகளும் 'பெண் ஆளுமைகள்' எனும் தொனிப்பொருளில் கதைகள் சமர்ப்பித்ததையிட்டு அதில் ஐந்து மாணவிகளின் கதைகள் சிறந்த கதைகளாக தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

சமூகத்திலுள்ள பிரச்சினைகளை ஒரு பெண் ஊடகவியலாளராக செயற்பட்டு அவை காணொளி கதைகளாக வெளிவர வேண்டுமென்பதே இக்கற்கைநெறியின் நோக்கமாகும்.

இக்கற்கைநெறிக்காக பெண்கள் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



***வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருகோணமலை, சேருநுவர கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட வயல் பகுதிகளுக்கு கமநல காப்புறுதிச் சபையின் விசேட அதிகாரிகள் குழு திங்கட்கிழமை (23) சென்று பார்வையிட்டு சேத விபரங்களை அறிக்கையிட்டனர். கமநல சேவை காப்புறுதிக்குழுவின் உத்தியோகத்தர்கள், சேருநுவர கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கள விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.***

***(மூதூர் செய்தியாளர்)***



***அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட 06 கிராமசேவகர் பிரிவை உள்ளடக்கி தெரிவுசெய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் ஆகியோர் கலந்துகொண்டு உதவிகளை வழங்கினர்.***

***(நற்பிட்டிமுனை செய்தியாளர்)***



***மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேசத்திலுள்ள கதிரவன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பிலுள்ள மாற்றுத்திறனாளி ஒருவரின் மருத்துவச் செலவுகளுக்காக 50ஆயிரம் ரூபா நிதி பசுமை இல்லத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி உதவியை சுவிஸிலுள்ள பெண்கள் அமைப்பினர் வழங்கினர். இதன்போது போரதீவுப்பற்று பிரதேச உதவிப் பிரதேச செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் பசுமை இல்லம், கதிரவன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பினரைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர்.***

***(மட்டக்களப்பு செய்தியாளர்)***

Amritha
மனம் மகிழட்டும் நறுமணத்தால்
தமிழன்
உடன்
திருப்பதி புனித யாத்திரை




Amritha வின் திருப்பதி புனித யாத்திரைக்கான அதிர்ஷ்டசாலிகளாக நீங்களும் மாறலாம். இதற்காக நீங்கள் செய்ய வேண்டியது 'தமிழன்' பத்திரிகையில் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பிரசுரமாகும் Amirtha திருப்பதி புனித யாத்திரை தொடர்பாக கூப்பனை வெட்டியெடுத்து அதில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை பூர்த்தி செய்து Amirtha ஊதுபத்தி பெட்டியை அதனுடன் இணைத்து

Amritha வின் திருப்பதி புனித யாத்திரை ,
'தமிழன்' ஆசிரியர் பீடம், இல: 91,
லிபர்ட்டி பப்ளிஷேர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ,
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு -07

என்ற முகவரிக்கு எதிர்வரும் 2025-02-28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

கூப்பன் இலக்கம் 17

பெயர்: ----------------------------------------------------------

முகவரி : --------------------------------------------------------

தொலைபேசி இலக்கம்: ------------------------------------------

# கோட்டா எவ்வாறு சிறுபான்மையினரை நடத்தினாரோ அவ்வாறே தற்போதைய ஜனாதிபதியும் செயற்படுகிறார்

## முன்னாள் எம்.பி. கருணாகரம்



(கனகராசா சரவணன்)

''ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ வந்ததும் சிறுபான்மைச் சமூகங்களை எப்படி நடத்தினாரோ அதில் எந்தவித மாற்றமுமில்லாமல் தற்போதைய ஜனாதிபதியும் அவருடைய கட்சியும் நடத்துகின்றன. எனவே, ஒரே நாடு, நாங்கள் எல்லோரும் சமத்துவமான மக்கள் என வாய்கிழியக் கூறும் ஜனாதிபதி இதனை உணர்ந்து கொண்டு எதிர்காலத்தில் இப்படியான தவறுகளை விடாமல் நடக்கவேண்டும்'' - என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வாவிக்கரையிலுள்ள அவரது காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இலங்கை மீண்டுமொருமுறை இந்திய, சீனாவின் அதிகாரப் போட்டியில் சிக்கி யிருக்கின்றது. சர்வதேச அரசியல் எப்படி இருந்தாலும் கடந்த காலத்தில் போராட்ட இயக்கமாக இருந்த தேசிய மக்கள் சக்தி இன்று ஆட்சியைப் பிடித்துள்ளது. இவர்கள் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலின்போது தேர்தல் விஞ்ஞாபனத்திலே வடக்கு, கிழக்கை மையமாக வைத்து அத்துமீறிய குடியேற்றம் நிறுத்தப்படும், ஆட்சிக்கு வந்ததும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு முடிவு கட்டுவோம் என சில வாக்குறுதிகளை அளித்தனர்.

ஆனால், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையை வருடக்கணக்காகப் பயன்படுத்திய கால்நடை உரிமையாளர்கள் அங்கு ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இன்று வரை வீதியில் உட்காந்திருக்கின்றனர். அதேபோன்று, அரசியல் கைதிகள் ஒருவர் கூட இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை. வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் ஆயிரக் கணக்கான காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். பாடசாலை போன்றவற்றின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவை எதுவும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இவ்வாறு வடக்கு, கிழக்கு தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஆனால், தெற்கில் ஊழலுக்கு எதிராக ஆட்சி என கடந்த காலத்தில் ஊழல் செய்தவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படுகின்றது. ஜனாதிபதி நிதியத்திலிருந்து பண ஊழல் செய்த அரசியல்வாதிகள் மற்றும் விமானப்படையின் விமானங்களைப் பயன்படுத்திய அமைச்சர்களின் பெயர்கள் வெளியிடப்படுவதுடன், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்படுகின்றது. அவ்வாறே 2015 தொடக்கம் 2020 வரை ஜனாதிபதி ஊடகப் பிரிவிலே இருந்து கோடிக்கணக்கான பொருட்கள் மாயமாகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எதிர்காலத்தில் தாங்கள் அரசியல் ரீதியாக பலமாக இருக்கவேண்டுமென்பதற்காக அரசியல் ரீதியாக சில விடயங்களை மேற்கொள்கின்றனர்.

எனவே, தெற்கிலே பலமாக இருக்கவேண்டும் என நினைப்பவர்கள் கடந்த காலத் தேர்தல்களில் வடக்கு,கிழக்கில் இவர்களை நம்பி கணிசமாக வாக்களித்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறந்தவண்ணமாக இருக்கின்றன. எனவே, ஜனாதிபதி கடந்தவாரம் இந்தியா சென்றிருந்தார். அப்போது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கான தீர்வைக் கொடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம் என்று சொன்ன இந்தியப் பிரதமர் மோடி நாங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றாக - ஒற்றுமையாக ஒரே கட்சியில் ஒரே கூட்டணியில் பயணித்திருந்தால் கணிசமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருந்தால் ஒரு பலமான அழுத்தத்தை ஜனாதிபதிக்கு கொடுத்திருப்பார். எனவே, இவற்றை நாங்கள் கருத்திற்கொண்டு ஒரு பலமான ஒரே சக்தியாக தமிழ் மக்களுக்காகச் செயற்படவேண்டும்.


கிளீன் ஸ்ரீலங்கா 18 பேர் கொண்ட ஒரு செயலணியை ஜனாதிபதி நியமித்துள்ளார். அவர்களுள் சிறுபான்மையினர் எவருமில்லை.இதனை தெரிந்தா அல்லது தெரியாமலா செய்கின்றார் என விளங்கவில்லை. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்ததும் சிறுபான்மை சமூகங்களை எப்படிக் கணிப்பிட்டாரோ அந்தக் கணிப்பில் எந்தவித மாற்றமும் இல்லாமல் ஜனாதிபதியும் அவருடைய கட்சியும் நடக்கின்றன. கோட்டா காலத்தில் தொல்பொருள் என்ற செயலணியை நியமித்தார். அதில் பௌத்த பிக்குகளும் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற உயரதிகாரிகள் என எந்தவிதமான நிபுணத்துவமும் இல்லாத 11 பேரும் நியமிக்கப்பட்டனர்.

அநுரவுக்கு கணிசமான தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களித்துள்ளனர் என்பதை உணர்ந்து கொண்டு எதிர்காலத்திலே இந்த நாடு ஒரே நாடு எல்லோரும் சமத்துவமான மக்கள் என வாய்கிழியக் கூறும் இந்த அரசாங்கமும் ஜனாதிபதியும் இப்படியான தவறுகளை விடாமல் நடக்கவேண்டும். அதேவேளை, 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் 05 வாக்குகளையும் 10 வாக்குகளையும் எடுத்தவர்கள் கூட உறுப்பினர்களாக வந்து மன்றங்களில் குழப்பநிலையை ஏற்படுத்தும் நிலைமை காணப்படுகிறது. எனவே, இந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவந்த அரசாங்கம் கூட குளறுபடியான சட்டமூலம் என ஏற்றுக்கொண்டது. ஆகையால் இந்தச் சட்டமூலத்தைத் திருத்தி விகிதாசார முறைமை அல்லது வட்டாரங்களை மட்டும் உள்ளடக்கிய ஒரு புதிய முறைமையை கொண்டுவர வேண்டும்''- என்றார்.

# கிளீன் ஸ்ரீலங்காவில் தமிழ் பேசும் சிறுபான்மையினர் இடம்பெறவேண்டும்

## இல்லாதுவிடின் குழுவின் செயற்பாடுகளில் சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்கிறார் சிறிநேசன் எம்.பி.

(மட்டக்களப்பு செய்தியாளர்)



''முதல் கோணல் முற்றும் கோணல்' என்கின்ற பழமொழியொன்று தமிழில் உண்டு. ஆயின், அரசாங்கத்தில் கிளீன் ஸ்ரீலங்கா எனும் ஆணைக்குழுவில் தமிழர்களோ முஸ்லிம்களோ இல்லை. அதில் சிறுபான்மை இனத்தவர்கள் இடம்பெற வேண்டியது அவசியமாகும். இல்லாதுவிட்டால், குழுவின் செயற்பாடுகளிலும் சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது''- என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் கிளீன் ஸ்ரீலங்கா என்னும் ஆணைக்குழுவானது ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 18 உறுப்பினர்கள் உள்ளனர். அந்தப் 18 உறுப்பினர்களும் பெரும்பான்மை இனத்தவர்களாகவே உள்ளனர். தமிழர்களோ முஸ்லிம்களோ அதில் இல்லை. பல்லின சமூகங்கள் உள்ள இலங்கையில் தமிழ் பேசும் சமூகத்தவர்கள் இடம்பெறாத நிலைப்பாடு தமிழ் பேசும் சமூகத்தவர் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறுதான் கடந்த பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் காலத்தில் கோட்டாபயவினால் அமைக்கப்பட்ட தொல்லியல் ஆணைக்குழு என்கின்ற தமிழ் பேசும் மக்களுக்குத் தொல்லைகள் கொடுத்த ஆணைக்குழுவிலும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் இடம்பெறவில்லை. அந்த பொதுஜன பெரமுன அரசும் தொல்லியல் ஆணைக்குழுவும் இன, மத, அடிப்படைவாத அடிப்படையில்தான் அமைந்திருந்தது.

அதன் செயற்பாடுகளான தொல்லியல் இடங்களை இனங்காணும் செயற்பாடுகள் மற்றும் பௌத்த விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளும் அடிப்படைவாத செயற்பாடுகளாகவே இருந்தன. தற்போதைய தேசிய மக்கள் சக்தியால் அமைக்கப்பட்ட கிளீன் ஸ்ரீலங்கா ஆணைக்குழுவில் தமிழ் பேசுனர் இடம்பெறாத நிலைமையும் சந்தேகத்தைத் தருகின்றது.

எனவே, ஜனாதிபதி அநுரவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அடிப்படைவாதமற்ற தன்மையை ஆரம்பத்திலிருந்தே உறுதிப்படுத்த வேண்டும். எது எப்படியாக இருந்தாலும், 75 ஆண்டுகளாக அடிப்படைவாதம், ஊழல், மோசடிகள், திருட்டுகள், இலஞ்சம் என்பவற்றால் நாசமாக்கப்பட்ட இந்நாட்டை சுத்தம் செய்ய வேண்டிய தேவை அவசியமானதாகும். சுத்தப்படுத்த வல்ல தமிழர், முஸ்லிம் பிரஜைகளும் இலங்கையில் உள்ளனர் என்பதை ஜனாதிபதி அநுர நினைவில் கொண்டு, செயலாற்ற வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிராம சேவகர் தாக்கப்பட்ட சம்பவம்

## சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படாமையை கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம்





(வாழைச்சேனை மேலதிக, கிரான் செய்தியாளர்கள்)

மட்டக்களப்பு, கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலக கிராம சேவகர் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும் இதற்கு காரணமானவர்களைக் கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக்கோரியும் நேற்று திங்கட்கிழமை (23) கவனயீர்ப்புப் போராட்டம் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது.

கோறளைப்பற்று கிராம சேவகர் கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை கடமை நிமித்தம் நாசீவன் தீவு கிராமத்துக்கு சென்றுவரும்போது மதுபோதையில் வந்த குழுவொன்றினால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.


இந்நிலையில், 04 நாட்கள் கடந்தும் தாக்கிய நபர்களை இதுவரை பொலிஸார் கைதுசெய்யாமையைக் கண்டித்தே வாழைச்சேனை பிரதேச செயலகத்துக்கு முன் பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, ''கைது செய் கைது செய் தாக்கிய வரை கைது செய், அரச உத்தியோகத்தரின் பாதுகாப்பை உறுதி செய், கடமையை செய்தால் உயிருக்கு அச்சுறுத்தலா, அரச பணியாளர்கள் மீதான தாக்குதலுக்கு எப்போது தீர்வு'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது வருகை தந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ''குறித்த சந்தேகநபரை பொலிஸார் தேடிக் கொண்டிருப்பதாகவும் இதுவரை அவர்கள் கைதுசெய்யப்படவில்லையென்றும் அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

பொலிஸாரின் உறுதிமொழியையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும் பிரதேச செயலாளரிடமும் மகஜர் கையளிக்கப்பட்டு பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# கொக்கட்டிச்சோலையில் 70,000 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காட்டுப் பிரதேசத்தில் மாவட்ட குற்ற விசாரணை பிரிவு நேற்று அதிகாலை நடத்திய திடீர் சுற்றி வளைப்பின்போது பாரிய சகிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டலில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலிரத்னவின் ஆலோசனையில் மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி எம்.திலங்காவலவின் தலைமையிலான பொலிஸார் இத்திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது 03 பெரல்களில் 5,40,000 மில்லி லீற்றர் கோடா, 70,000 மில்லி லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டன. சான்று பொருட்களுடன் சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# ஆலங்கேணி பகுதியில் யானை தாக்கி வீடு பலத்த சேதம்

## குடும்பத்தினர் மயிரிழையில் உயிர் பிழைப்பு



(கிண்ணியா செய்தியாளர்)



திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி பகுதியில் நேற்று முன்தினம் இரவு(22) ஊருக்குள் நுழைந்த காட்டு யானை வீட்டைத் தாக்கியதில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவிக்கிறார்.

இரவு நேரத்தில் தனது பிள்ளையுடன் தூங்கிக் கொண்டிருக்கும் போது குறித்த யானைத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் இதனால் வீடு மற்றும் உடைமைகள் சேதமாக்கப்பட்டு மயிரிழையில் தாம் உயிர் தப்பியதாகவும் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் அடிக்கடி யானைத் தொல்லை ஏற்படுவதனால் அப் பிரதேச மக்கள் நிம்மதியாகத் தூங்க முடியாது தவிக்கின்றனர். பாதுகாப்பான யானை வேலி இன்மையால் யானைத் தொல்லையிலிருந்து தம்மைப் பாதுகாக்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

# கசிப்பு உற்பத்தி நிலையம் நடத்திய சந்தேகநபர் கைது



(பாறுக் ஷிஹான்)

கசிப்பு உற்பத்தி நிலையமொன்றை நீண்ட காலமாக நடத்தி வந்த சந்தேக நபரை சம்மாந்துறை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரச்சோலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்குப் பின்னால் சூட்சுமமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையம் கடந்த சனிக்கிழமை(21) இரவு சம்மாந்துறை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது மிக சூட்சுமமான முறையில் குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்திச் சென்ற 50 வயதுடைய சந்தேக நபரைக் கைது செய்துள்ளதுடன் சந்தேக நபரிடமிருந்து 80,000 மில்லி லீற்றர் கசிப்பு, 1,70,000 மில்லி லீற்றர் கோடா, 1,30,000 மில்லி லீற்றர் வடிசாராயம் மற்றும் பரல் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும் சம்மாந்துறை வீரமுனை 03 பகுதியைச் சேர்ந்த கைதான குறித்த சந்தேக நபர் வசமிருந்து சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டு சந்தேக நபரும் கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருட்கள் சவளக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சவளக்கடை பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்மாந்துறை விசேட அதிரடிப்படை உப பொலிஸ் பரிசோதகர்களான எம்.ஜி.ஏ.கே.ஜெயஸ்ரீ மற்றும் ஓ.வி.கே.டி.விஜயஸ்ரீ ஆகியோர் தலைமையிலான குழுவினர் இந்நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருள் கடத்திய இருவருக்கு விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருட்களை வாடகை வாகனமொன்றினூடாக விநியோகித்த இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை புறநகர் பகுதியில் சனிக்கிழமை (21) நள்ளிரவு சந்தேகத்துக்கிடமாக சென்ற வேன் ஒன்றைப் பின்தொடர்ந்த பொலிஸார் குறித்த வாகனத்தை நிறுத்தி சோதனை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த வாகனத்திலிருந்து ஒரு தொகுதி ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் அதில் பயணம் செய்த 24 வயது மதிக்கத்தக்க இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த வேன் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களான மருதமுனை பகுதியைச் சேர்ந்த இருவரும் ஞாயிற்றுக்கிழமை (22) மாலை கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதுடன் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுகாதார சேவைகளை மேம்படுத்த காரியாலய உபகரணங்கள் வழங்கல்



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் காரியாலயத்துக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் சனிக்கிழமை(21) வழங்கப்பட்டன.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு மிக நீண்ட காலத் தேவையாகக் காணப்பட்டு வந்த குறைபாடுகளை நிவர்த்திசெய்து தருமாறு அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியினால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகிலா இஸ்ஸடீனிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இந்த உபகரணங்களும் தளபாடங்களும் வழங்கப்பட்டன.

இதன்போது நிழற் பிரதி பண்ணல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், மேசை, கதிரைகள் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சி.எம்.மாஹிர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



**கிழக்கு மாகாண சமூக சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவுக்குமிடையிலான சந்திப்பு அண்மையில் (19) ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சமூக சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் செயலாளர் ஏ.ஜீ.அர்ஸாத், உயர்பீடக் குழு உறுப்பினர்கள் ஏ.அஹமட் சபீர், பீ.ராஜ்மோகன், ஏ.எல்.பைசாத், எம்.எம்.எம்.ஜெய்சான் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது சமூகசேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் பொதுமக்களுக்கான சேவைகளை மேம்படுத்தல் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)**

# 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள 5 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டங்கள்

## பணிகளை மீள ஆரம்பிக்கத் திணறும் நகர அபிவிருத்தி அமைச்சு



2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ஐந்து அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

குறித்த குடியிருப்புத் தொகுதிகளின் கட்டுமானப் பணிகளுக்காக ஒப்பந்தமாகியிருந்த நிறுவனங்களின் கடன் நெருக்கடி காரணமாக குறித்த திட்டங்களை எவ்வாறு மீண்டும் தொடங்குவது என்பதைத் தீர்மானிக்க முடியாமல் நகர அபிவிருத்தி அமைச்சு திணறுவதாகத் தெரியவந்துள்ளது.

அடுக்குமாடிக் குடியிருப்புத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கான இந்தத் திட்டங்களில் கொழும்பு - டொரிங்டன் அவென்யூ, கொலம்பகே மாவத்தை மற்றும் பொரளை ஆகிய இடங்களில் மூன்று திட்டங்களும் ஏனைய இரண்டு திட்டங்களும் களுத்துறை மாவட்டத்தில் வாதுவ மற்றும் கம்பஹா மாவட்டத்தில் ராகம ஆகிய இடங்களிலும் நிர்மாணிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ராகமையில் குறித்த குடியிருப்புத் தொகுதிக்கு ஒப்பந்தமாகியிருந்த நிறுவனம் வங்கிக் கடன் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாகவும் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், இன்னுமொரு நகர அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னதாக இடைநிறுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டங்களை முழுமைப்படுத்த நகர அபிவிருத்தி அமைச்சு முயற்சிக்கிறது.

நகர அபிவிருத்தி அதிகார சபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை என்பன இத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள அரசாங்க நிறுவனங்களாகும்.

# நத்தார் பண்டிகையை முன்னிட்டு தேவாலயங்களுக்கு விஷேட பாதுகாப்பு

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தேவாலயங்களிலும் பொலிஸ் மற்றும் முப்படையினர் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்தவும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பொலிஸ் மற்றும் விஷேட அதிரடிப்படையினர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு தொடர்பில் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்காக மேல் மாகாணத்தில் மாத்திரம் 6,500க்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனதுங்க தெரிவித்தார்.

நாடு முழுவதுமுள்ள 2,000க்கும் மேற்பட்ட தேவாலயங்களில் நத்தார் தினத்தன்று ஆராதனைகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அந்தந்தப் பகுதிகளுக்கான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தேவாலயங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவில் குழுக்களுடன் ஒருங்கிணைந்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளனர்.

உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், தேவைப்பட்டால் இராணுவத்திடமோ அல்லது ஏனைய பாதுகாப்புப் படையினரின் உதவியை பொலிஸார் நாடுவார்கள் என்றார்.

இதேவேளை, பண்டிகைக் காலங்களில் கவனக்குறைவாக வாகனம் செலுத்தும் சாரதிகளை இலக்கு வைத்து விசேட சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் விரிவான பாதுகாப்பு வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், 500க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடையில் வழிபாட்டு தலங்கள் மற்றும் மக்கள் கூடும் சந்தைப் பகுதிகள் ஆகிய இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத மின்பாவனை; மின்சார சபை எச்சரிக்கை

### காட்டு யானைகளை பாதுகாக்க உதவுமாறு மக்களிடம் கோரிக்கை




மின்சாரத்தை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி காட்டு யானைகள் கொலை செய்யப்படுவதைத் தடுக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென இலங்கை மின்சார சபை ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் ஏ.டி.கே. பராக்கிரமசிங்க விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நமது நாட்டின் உயிர்ப் பல்வகைமையின் அடையாளமாக விளங்கும் காட்டு யானைகள், மனிதச் செயற்பாடுகளால் அழியும் அபாயத்தில் உள்ளன. கணக்கெடுப்புகளின் படி, 2024ஆம் ஆண்டில் மட்டும் இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் மின்சாரம், அனுமதியின்றி வேலிகளில் அல்லது கம்பிகளில் இணைக்கப்பட்டதன் காரணமாக சுமார் 50 யானைகள் இறந்துள்ளதாகப் பதிவாகியுள்ளது.

இந்தச் சட்டவிரோதச் செயல் தொடர்பில் இலங்கை மின்சார சபை ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், எமது நாட்டின் காட்டு யானை வளத்தைப் பாதுகாப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது.

மின் இணைப்பை அனுமதியின்றி வேலிகளில் அல்லது கம்பிகளில் பயன்படுத்துவது தொடர்பான தகவல்கள் தெரிந்தால் உடனடியாக 0112 118 767 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது 1987 என்ற துரித எண்ணுக்கோ இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புராதன காலந்தொட்டு சமய ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகின்ற உள்நாட்டு - வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற, அவர்களால் விரும்பப்படுகின்ற நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்கின்ற யானைகளைப் பாதுகாக்க எங்களுடன் இணையுமாறு உங்களையும் அழைக்கிறோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





கொச்சிக்கடை, ஜெம்பட்டா லேன், முனியாண்டி சுவாமி காளியம்மன் கோயிலின் 57ஆவது ஆண்டு திருவிழா கோவில் தர்மகர்த்தா பவனேசன் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பக்த அடியார்கள் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:எம்.நசார்)

# பெண்ணொருவருக்கு கொலை மிரட்டல் விடுத்து ஒரு மில்லியன் ரூபா கப்பம் கோரிய இருவர் கைது

பெண்ணொருவருக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுத்து கப்பம் கோரிய சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

களனி, திப்பிட்டிகொட பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு கடந்த டிசம்பர் மாதம் 04ஆம் திகதி வெளிநாட்டைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரிடமிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருந்ததுடன், சந்தேகநபர்கள் இருவரையும் பயன்படுத்தி ஒரு மில்லியன் ரூபா கப்பமும் கோரப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டையடுத்து மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்படி, களனி பிரதேசத்தைச் சேர்ந்த 35 மற்றும் 53 வயதுகளையுடைய இரண்டு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (22) காலை கிரிபத்கொட, தலுகம பிரதேசத்திலும் பேலியகொட, பட்டியசந்தி பகுதியிலும் கைதுசெய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செல்பி மோகத்தால் விபரீதம்; ரயிலில் மோதி இருவர் பலி

## அநுராதபுரத்தில் சம்பவம்

(அநுராதபுரம் நிருபர்)

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடுகதி ரயிலில் மோதி இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் புதிய நகரம் ரயில் நிலையத்துக்கருகில் நேற்று முன்தினம் (22) மாலை 4.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இரத்தினபுரி ஷீ பலாபத்தல பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 18 வயது பாடசாலை மாணவியொருவரும் இன்னுமொரு பாடசாலை மாணவியின் 37 வயதுடைய தாயொருவருமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது.

அநுராதபுரம் மக்கள் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற டைக்கொண்டோ விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள இரத்தினபுரியிலிருந்து அநுராதபுரத்துக்கு சென்றிருந்த வேளையில் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்த இரு பெண்களும் 18 வயதுடைய ஓர் இளைஞனுடன் இணைந்து ரயில் வீதியில் செல்ஃபி புகைப்படம் எடுக்கும்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் 18 வயது இளைஞன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். உயிரிழந்த இரு பெண்களினதும் சடலங்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹைபொரஸ்ட் ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்ற மகா குருபூஜை





நுவரெலியா , ஹைபொரஸ்ட் ,இலக்கம் 3ஆம் பிரிவு ஸ்ரீ ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயத்தில் மகா குருபூஜை மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

அகில இலங்கை மலையக ஐயப்ப ஒன்றியமும் ஸ்ரீ ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயமும் இணைந்து நடத்திய 20ஆவது வருட மகா குரு பூஜை இதுவாகும்.


காலை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டு ஐயப்பனுக்கு அபிஷேகம், தீப பூஜை, 18ஆம் படி பூஜை இடம்பெற்றதோடு, இந்திய பக்தி இசைப் பாடகர் வீரமணி ராஜுவின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றது.

இதில் ஏராளமான ஐயப்ப குருசுவாமிகள், ஐயப்ப பக்தர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி செயலகத்தில் நத்தார் கரோல் இசை நிகழ்ச்சி











ஜனாதிபதி அலுவலகம், முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து வருடாந்தம் நடத்தும் நத்தார் விசேட கரோல் இசை நிகழ்ச்சி தொழிலமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் நேற்று முன்தினம் (22) ஆரம்பமாகியது.

நத்தார் கரோல் இசை நிகழ்ச்சியை முன்னிட்டு ஜனாதிபதி செயலக வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு, இலங்கை இராணுவத்தின் பாடல் குழு மற்றும் இசைக்குழுவினரால் நத்தார் கரோல் இசையும் நிகழ்த்தப்பட்டது.

இந் நிகழ்வு 25 ஆம் திகதிவரை தினமும் இரவு 7.00 மணி முதல் ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

நேற்று (23ஆம் திகதி) இலங்கை விமானப்படையின் பாடல் மற்றும் இசைக்குழு இணைந்து கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சியை நடத்தின.

நேற்று முன்தினம் நடந்த கரோல் இசை நிகழ்ச்சியை நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் நஜித் இந்திக்க, லக்மாலி ஹேமச்சந்திர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்க உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.



# “உலகில் இடம்பெற்றுவரும் போர்கள் நிறுத்தப்பட வேண்டும்”

“உலகில் இடம்பெற்றுவரும் போர்கள் நிறுத்தப்பட வேண்டும்'' - என கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் போப் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இத்தாலியின் வத்திக்கான் நகரிலுள்ள புனித பீற்றர் தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறப்புத் திருப்பலியின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''உக்ரைன் நகரங்கள் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாகி வருகின்றன. இந்தத் தாக்குதல்களில் சில நேரங்களில் பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் தேவாலயங்கள் சேதமடைகின்றன.

காஸாவில் குரூரமான தாக்குதல் நடத்தப்படுகிறது. துப்பாக்கிச்சூட்டில் குழந்தைகள் உயிரிழக்கின்றனர். பாடசாலைகள், வைத்தியசாலைகள் மீது குண்டுகள் வீசப்படுகின்றன. நத்தார் பண்டிகையின்போது உலகில் நடைபெறும் போர்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று அனைவரும் பிரார்த்தனை செய்வோம்'' - என்றார்.

## நிவாரண உதவிகளைத் தடுக்கும் இஸ்ரேல்: மனிதாபிமான நெருக்கடிக்குள் காஸா!

### உயிரிழப்புகள் அதிகரிக்கும் அபாயம்



காஸாவுக்கு ஒக்டோபர் மாதத்திலிருந்து 12 லொறிகளில் மட்டுமே உணவு, தண்ணீர் மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளதென ஒக்ஸ்பம் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டப்பட்ட அறிக்கையில், “வடக்கு காஸாவுக்குள் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்ட 34 லொறிகளில் கடந்த இரண்டரை மாதங்களில் வெறும் 12 லொறிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல் இராணுவம் வேண்டுமென்றே காட்டிய கெடுபிடிகளால் உணவு, தண்ணீரைக் கொண்டுசெல்வதில் சிக்கல் ஏற்பட்டது” என்று குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய கெடுபிடிகளால் காஸாவில் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஒக்ஸ்பம்,

''மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான மக்கள் தவித்து வருகின்றனர். ஆனால், இஸ்ரேல் இராணுவம் இரக்கமின்றி நடந்துகொள்கிறது. உணவு, தண்ணீர் லொறிகளை எடுத்துச் செல்ல அத்தனை அனுமதியும் கிடைத்த பின்னரும் கூட ஜபாலியாவில் தேவையே இன்றி லொறிகளைத் தடுத்து நிறுத்துகிறது.

மேலும், இராணுவப் பகுதிகளில் உணவு, தண்ணீரை இறக்கிவைக்க சாரதிகளை நிர்ப்பந்திக்கிறது. கடந்த மாதம் மட்டும் 11 லொறிகள் இவ்வாறாக நிறுத்திவைக்கப்பட்டன” எனக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேபோல், நியூயோர்க்கை தலைமையிடமாகக்கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் டிசம்பர் 19ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில்,

“இஸ்ரேல் அதிகாரிகள் திட்டமிட்டுக் காஸாவுக்கு உணவு, தண்ணீர் கிடைப்பதைத் தடுத்து வருகின்றனர். இதனால் ஆயிரக்கணக்கானோர் அங்கே உயிரிழந்துள்ளனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் மேலும் உயிரிழப்புகள் அதிகரிக்கும்” எனத் தெரிவித்துள்ளது.

**45 ஆயிரத்தைக் கடந்த உயிரிழப்புகள்**

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினருக்கிடையே கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி தொடங்கிய போர் ஓராண்டைக் கடந்து இன்றும் நீடிக்கிறது.

இரண்டு நாடுகளின் அதிகார மையங்களுக்கு மத்தியில் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் தங்களது இன்னுயிரைத் துறந்து வருகின்றனர். ஆனால், இன்னும் போரின் உக்கிரம் குறைந்தபாடில்லை. ஹமாஸை அழிக்காமல் ஓயமாட்டோமென இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு சூளுரைத்துள்ளார். இந்நிலையில், காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 45,259இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,07,627இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில், போரால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றுசேர்வதிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

## பட்டினியின் பிடியில் நைஜீரியா: கூட்ட நெரிசலில் சிக்கி 67 பேர் பலி!





நைஜீரியாவில் நத்தார் பண்டிகையையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உணவு வழங்கும் நிகழ்வின்போது ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி 35 குழந்தைகள் உட்பட 67 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவிவரும் நிலையில், இலட்சக்கணக்கானோர் பட்டினியில் சிக்கித் தவிக்கின்றனர்.

இந்நிலையில், நத்தாரை முன்னிட்டு கடந்த வாரம் நைஜீரியாவின் பல்வேறு நகரங்களில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த உணவு வழங்கும் நிகழ்வின்போது ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி 67இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அந்தவகையில் ஒயோ மாநிலத்தில் கடந்த புதன்கிழமை 35 குழந்தைகள் வரை கொல்லப்பட்ட நிலையில், சனிக்கிழமையன்று தென்கிழக்கு அனம்ப்ரா மாநிலத்தில் இடம்பெற்ற கூட்ட நெரிசலில் சிக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு தலைநகர் அபுஜாவில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பங்கள் குறித்த முழுமையான விசாரணைக்கு நைஜீரிய அரசு உத்தரவிட்டுள்ளது.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஜனாதிபதி போலா டினுபு, வரவிருக்கும் அனைத்து கொண்டாட்டங்களையும் இரத்துச்செய்துள்ளார்.

இந்தத் துயரங்களுக்கு நாட்டில் நிலவும் அதிகப்படியான வறுமை, அதிக உணவு விலைகள் மற்றும் அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளே காரணம் என்று தொழிலாளர் கட்சித் தலைவர் பீற்றர் ஓபி குற்றஞ்சாட்டியுள்ளார்.

### மதுபோதையில் சாரதி

## நடைபாதையில் உறங்கியவர்கள் மீது ஏறிய லொறி: மூவர் பலி; அறுவர் படுகாயம்; மூவர் கவலைக்கிடம்





புனேயில் நடைபாதையில் உறங்கியவர்கள் மீது லொறியேறியதில் இரண்டு குழந்தைகள் உட்பட 3 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மஹாராஷ்டிரா மாநிலம் புனே நகரின் வகோலி சௌக் பகுதியில், நடைபாதையில் 12 பேர் அசந்து தூங்கிக்கொண்டிருந்தபோது, அவ்வழியாகச் சென்ற லொறியொன்று நிலைதடுமாறி அவர்கள் மீது ஏறியுள்ளது. இதில் 2 குழந்தைகள் உட்பட 3 பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 6 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

26 வயதுடைய லொறியின் சாரதியை கைதுசெய்துள்ள பொலிஸார் அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் அவர் குடிபோதையில் இருந்தமை தான் விபத்துக்கான காரணம் என தெரியவந்தது.

## பிரேஸில் விமான விபத்தில் 10 பேர் பலி; 17 பேர் காயம்!



பிரேஸிலில் சுற்றுலாத் தலமொன்றின்மீது சிறிய ரக விமானமொன்று வீழ்ந்து நொறுங்கியதில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பிரேஸிலின் ரியோ கிரான்ட் டு சுல் மாகாணத்திலிருந்து 62 பயணிகளை ஏற்றிக்கொண்டு சிறிய ரக விமானமொன்று, சாலொ பாலோ மாகாணத்துக்குச் சென்ற நிலையில், விமானியின் கட்டுப்பாட்டை விமானம் இழந்துள்ளது. நீண்ட நேரமாக தரையிறக்கப் போராடிய விமானி எந்த முயற்சியும் வெற்றி பெறாத நிலையில் விமானம் சுற்றுலாத்தலமொன்றின்மீது வீழ்ந்து நொறுங்கி தீப்பிடித்துள்ளது.

இந்த விபத்தில் 10 பேர் தீயில் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## “மொஸ்கோவில் வாழ முடியாது எனக்கு விவாகரத்து வேண்டும்”

### அசாத்திடம் விவாகரத்துக் கோரும் அஸ்மா



“மொஸ்கோவில் வாழ இயலாது. அதனால் எனக்கு விவாகரத்து வேண்டும். லண்டன் செல்ல சிறப்பு அனுமதி வேண்டும்” - என்று சிரியாவின் முன்னாள் ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் மனைவி அஸ்மா அல்-அசாத் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அஸ்மா, ரஷ்ய நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளதாக அரபு மற்றும் துருக்கி ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

சிரியாவின் ஜனாதிபதியாகவிருந்த பஷர் அல்-அசாத் அரசுக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு புரட்சி வெடித்தது. அசாத் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக போர் நடைபெற்றுவந்த நிலையில், கடந்த நவம்பர் 27ஆம் திகதி சிரியா இராணுவத்துக்கு எதிராக மிகப்பெரிய போரை துருக்கி ஆதரவுபெற்ற எச்டிஎஸ் கிளர்ச்சிப் படை தொடங்கியது. அதேநேரம், ஈரானும், ரஷ்யாவும் ஆதரவு தராததால் அசாத் தலைமையிலான சிரியா இராணுவம் பின்னடைவைச் சந்தித்தது. இதனால் முக்கிய நகரங்களைக் கைப்பற்றிய எச்டிஎஸ் கிளர்ச்சிப் படை, கடந்த 08ஆம் திகதி தலைநகர் டமஸ்கஸை கைப்பற்றியது. இதையடுத்து, நாட்டைவிட்டு வெளியேறிய அசாத் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார். அவர் ரஷ்யாவுக்குச் செல்வதற்கு முன்னதாகவே அவரது குடும்பத்தினர் அங்கு சென்றுவிட்டனர்.

இந்தப் பின்னணியில்தான் அசாத்தின் மனைவி அஸ்மா விவாகரத்துக்கோரி ரஷ்ய நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ததோடு, மொஸ்கோவிலிருந்து வெளியேற சிறப்பு அனுமதியும் கோரியுள்ளார். அஸ்மா, பிரிட்டிஷ் - சிரிய குடும்பத்தில் பிறந்தவர். அவரது 2000ஆம் ஆண்டு தனது 25ஆவது வயதில் சிரியாவுக்குச் சென்றுள்ளார். அங்கு பஷர் அல்-அசாத்தை காதலித்து திருமணம் செய்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, பஷர் அல்-அசாத் ரூ. 2ஆயிரம் கோடியை (இந்திய ரூபாபடி) ரஷ்யாவுக்கு எடுத்துச்சென்றதாகவும், இந்தத் தொகையை கடந்த 2018 மற்றும் 2019 காலகட்டத்தில் ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் பரபரப்புத் தகவல் வெளியானது. அதேபோல், மொஸ்கோவின் நுகோவோ விமான நிலையம் சென்றடைந்த கரன்சிகள் அந்நாட்டு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் அசாத்தின் உறவினர்கள் இதே காலத்தில் ரஷ்யாவில் இரகசியமாக சொத்துகளை வாங்கியதாகவும் தகவல் வெளியாகியிருந்தது.

## டில்லியை வாட்டும் குளிர்



டில்லி உட்பட வடமாநிலங்களைக் கடும் குளிர் வாட்டிவரும் நிலையில், டில்லியில் குறைந்தபட்ச வெப்பநிலை 7 டிகிரி செல்சியஸுக்கு கீழே சரிந்துள்ளது. இதனால் மக்கள் வீட்டுக்குள்ளே முடங்கியுள்ளனர்.

டில்லியின் அலிபூர், ஆனந்த் விஹார், பவானா மற்றும் புராரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடுமையான குளிரால் மக்கள் பாதிக்கப்பட்டனர். அத்தோடு டில்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்துள்ளது. காற்றுத் தரக்குறியீடு 409 ஆக உள்ளதாக தெரிவித்துள்ளது.

## “எலான் மஸ்க் அமெரிக்க ஜனாதிபதியாக முடியாது”

### ட்ரம்ப் திட்டவட்டம்



“தொழிலதிபர் எலான் மஸ்க் அமெரிக்க ஜனாதிபதியாக முடியாது'' என அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்புக்கு வெளிப்படையாகவே ஆதரவளித்த எலான் மஸ்க், அவரது பிரசாரத்துக்கு உதவ சுமார் 277 மில்லியன் டொலர்கள்வரை செலவிட்டார். அத்தோடு பல மேடைகளில் ட்ரம்புக்கு ஆதரவாக எலான் மஸ்க் பரப்புரையும் மேற்கொண்டார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் அமைச்சரவையில் எலான் மாஸ்க்குக்கு இடம் கொடுக்கப்படுமென ட்ரம்ப் அறிவித்திருந்த நிலையில், தேர்தல் வெற்றிக்குப் பின்னர் தொழிலதிபர் எலான் மஸ்க்குக்கு அமெரிக்க அரசின் திறன் துறையின் தலைமைப் பதவியைக் கொடுத்தார். இந்நிலையில், ட்ரம்ப்பின் புதிய நிர்வாகத்தில் மஸ்க்குக்கு அளவுக்கதிகமான இடம் கொடுக்கப்படுவதாக ஜனநாயகக் கட்சியினர் குற்றஞ்சாட்டினர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி பதவியை எலான் மஸ்க்குக்கு விட்டுக்கொடுக்கவுள்ளதாக வெளியான தகவலை ட்ரம்ப் முற்றிலுமாக மறுத்துள்ளார். அரிசோனா மாகாணத்தில் நடைபெற்ற குடியரசுக் கட்சி மாநாட்டில் பேசிய அவர், எலான் மஸ்க் அமெரிக்காவில் பிறக்கவில்லை என்றும் அதனால் அவர் கண்டிப்பாக ஜனாதிபதியாக முடியாது என்றும் தெரிவித்தார். சமூக வலைத்தளங்களில் பொய் செய்தி பரப்பப்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அமெரிக்காவின் அரசமைப்புச் சட்டப்படி அந்நாட்டில் பிறந்தவர்கள் மட்டுமே ஜனாதிபதியாக முடியும். எலான் மஸ்க் தென்னாபிரிக்காவில் பிறந்தவர் என்பதால் அமெரிக்க ஜனாதிபதியாக முடியாதென ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



**மெக்சிகோவின் மைக்கோகன் மாநிலத்தின் லா பரோடாவிலிருந்து நேற்றுமுன்தினம் (22) புறப்பட்ட செஸ்னா 207 எனும் சிறிய ரக விமானம், மேற்கு மெக்சிகோவின் ஜலிஸ்கோ மாநிலத்தின் காட்டுப் பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்தனர்.**

# ஈ.பி.டி.பியின் அரசியல் செயற்பாடுகளை வலுப்படுத்த வன்னியில் புதிய கட்டமைப்பு

## செயலாளர் நாயகம் டக்ளஸால் முன்னெடுப்பு



புு.கஜிந்தன்

வன்னி தேர்தல் மாவட் டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவால் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்றை செயலாளர் நாயகம் முன்னெடுத்திருந்தார்.

குறிப்பாக, வன்னி தேர்தல் மாவட்டத்தின் அரசியல் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக வவுனியா சென்றிருந்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்றத் தேர்தலின் பின்னடைவுகள் குறித்த அக, புற காரணிகளை ஆராய்ந்து கட்சியை வலுப்படுத்தும் வகையில் கட்டமைப்புகளை மறுசீரமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனடிப்படையில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி தேர்தல் மாவட்டத்தின் கட்சியின் அரசியல் செயற்பாடுகளை செழுமைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் வகையில் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளராக ஜெயராஜைக் (தோழர் கிருபன்) கொண்ட மாவட்டக் கட்டமைப்பும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவால் நியமிக்கப்பட்டது.

மேலும், கட்சியின் தேசிய மாநாட்டை விரைவில் நடத்துவதற்கு தயாராகுமாறும் கட்சியின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளமை குதிப்பிடத்தக்கது.

# ஒருசில அதிகாரிகளைக்கொண்டு மக்களுக்கு சேவை செய்வதென்பது சவாலான விடயம்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு



பு.கஜிந்தன்

''வடக்கு மாகாணத்திலுள்ள ஒருசில அதிகாரிகளை வைத்துக்கொண்டு எங்கள் மாகாண மக்களுக்கு சேவை செய்வதென்பது மிகச் சவாலான விடயமாகவே இருக்கின்றது'' – என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கரைச்சிப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசாரப் பெருவிழாவும் கரை எழில் நூல் வெளியீடும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை (22) கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது,

''கிளிநொச்சி மாவட்ட செயலராக நான் பணியாற்றியபோது இறுதிக்கட்டப்போர் ஆரம்பமானது. இந்த மாவட்ட மக்களுடன் நானும் இடம்பெயர்ந்து செல்லவேண்டியிருந்தது. அப்படியானதொரு மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்பதில் மகிழ்வடைகின்றேன்.

எந்த வசதிகளும் இல்லாமல் அன்றைய எமது பணிக்காலம் இருந்தது. ஆனாலும், மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கியிருந்தோம்.

உங்களுடைய தற்போதைய மாவட்டச் செயலர் சு.முரளிதரன் நேர்மையான ஒருவர். மக்களின் துன்பங்களை அறிந்து துயர் துடைக்கக்கூடிய ஒருவர். அவர் உங்களுக்கு மாவட்டச் செயலராகக் கிடைத்தமை சிறப்பானது.

இன்றைய இளையோர்களிடம் மற்றவர்களை மதிக்கும், உதவி செய்யும் பண்புகளைக் காண முடியவில்லை. தவறு செய்பவர்களை தட்டிக்கேட்க முடியாத நிலைமை இருக்கின்றது. வீதிகளில் குப்பைபோடுகின்றோம். வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால்களை ஆக்கிரமித்துக் கட்டடங்களைக் கட்டுகின்றோம்.

ஒழுக்கமில்லாத சமுதாயமாக நாங்கள் மாறிக்கொண்டு போகின்றோம். மிகக் கவலையாக இருக்கின்றது.

விழா மண்டபத்தை இந்தப் பிரதேச செயலக அலுவலர்களே அதிகமாக நிரப்பிக்கொண்டிருப்பதாக பிரதேச செயலரும் மாவட்டச் செயலரும் என்னிடம் சொன்னார்கள். உண்மையில் வேதனையாக இருக்கின்றது. எமது பிரதேசத்தின் பண்பாட்டு விழாவுக்கு வருகின்றார்கள் இல்லை. ஆனால், குத்துப்பாட்டுகளுடன் நடக்கும் நிகழ்வுகளுக்கு செல்கின்றார்கள்.

ஏனையவர்களுக்கு உதவி செய்வதில்தான் உண்மையான சந்தோஷம் இருக்கின்றது. ஆனால், இன்று எம்மில் பலர் பணம்தான் சந்தோஷம் என்று நினைக்கின்றார்கள். பணம் சந்தோஷத்தை தராது. ஒருவனுக்கு நாங்கள் உதவி செய்தால் எங்களுக்கு பல மடங்கு பல்வேறு வழிகளில் திருப்பி உதவி கிடைக்கும்.


மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பிறருக்கு உதவி செய்யவேண்டும். அதேபோல எல்லா மதங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. மற்றையவர்களிடத்தில் நாம் அன்பு செலுத்த வேண்டும்.

இதேவேளை, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலருக்கு அடுத்த நிலையிலுள்ள ஓர் அதிகாரிக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்து ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாக அணுகுமாறு கூறிவிட்டு அவர்களை அவரிடம் அனுப்பினேன். அந்த அதிகாரி தனது அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு ஆசிரியர்களை இரவு 7 மணிக்குத்தான் அலுவலகத்தில் சந்தித்திருக்கிறார். ஆசிரியர்களை மிக மோசமான முறையில் பேசி திருப்பியனுப்பியிருக்கின்றார். இவ்வாறான அலுவலர்கள் எமது மாகாணத்தில் எனக்கு கீழ் இருக்கின்றார்கள் என்பதை நினைக்கும்போது வெட்கமாக இருக்கின்றது. எங்களுக்குப் பதவிகள் தரப்பட்டது மக்களுக்கு சேவைசெய்யவே. அதை சகல அலுவலர்களும் மனதில் கொள்ளவேண்டும்.

உங்களிடம் சேவைக்காக பொதுமக்கள் வரும்போது, அந்தப் பொதுமகனாக நீங்கள் இருந்தால் எப்படி நடந்துகொள்வீர்கள்? அப்போது உங்களுக்குப் பேசுவதற்கு அல்லது மனிதநேயமற்று நடப்பதற்கு மனம் வருமா? எனவே, தற்போதுள்ள சகல வசதிகள், ஆளணிகளை வைத்துக்கொண்டு மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க முன்வரவேண்டும் - என்றார்.

# தென்மராட்சி விவசாய வீதியில் பெருமளவு மணல் அகழ்வு

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் போராட்டம்





சாவகச்சேரி நிருபர்

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரம்பகம் ஜே/330 கிராமத்திலுள்ள விடத்தற்பளை-கரம்பக பிள்ளையார் இணைப்பு வீதியில் நேற்று முன்தினம் (22) அதிகாலை வேளையில் மணல் அகழப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட விவசாயிகள் காலைவேளையில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

குடிமனைகளற்ற தோட்டங்களுக்குச் செல்லும் மணல் வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை வேளையில் 25இற்கும் மேற்பட்ட ரிப்பர் வாகனங்களில் ஜே.சி.பி. வாகன உதவியுடன் சட்டவிரோத துணிகர மணல் அகழ்வு இடம்பெற்றிருப்பதாக அப்பகுதி விவசாய மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கை யில்;

கரம்பகம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுகின்றபோதிலும் உரிய திணைக்களங்கள் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை.

இந்நிலையிலேயே எமது தோட்டப் பாதையில் மணல் இரவோடு இரவாக அகழப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த நிலைமை தொடர்ந்தால் எமது விவசாய நடவடிக்கைகள் மற்றும் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படும் – என்றனர்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் மற்றும் ஆளுநரிடம் முறைப்பாடு செய்யவுள்ளோம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# தனங்கிளப்பில் சட்டவிரோதமாக பனை மரங்கள் தறிப்பு

பு.கஜிந்தன்

தனக்கிளப்பு பகுதியில் 25இற்கும் மேற்பட்ட அனுமதியற்ற சட்டவிரோத பனை மரங்கள் தொடர்ச்சியாக தறிக்கப்பட்டு வந்த நிலையில், பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டையடுத்து பனை அபிவிருத்திச் சபையால் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது .

குறித்த சம்பவம் தொடர்பில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் தெரிவிக்கையில்,

தனங்கிளப்புப் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத பனை மரங்கள் வெட்டப்படுவதாக பனை அபிவிருத்திச் சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

முறைப்பாட்டின் அடிப்படையில் எமது உத்தியோகத்தர்கள் குறித்த இடத்துக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில், அங்கு 25இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் கனகர இயந்திரங்கள் குறித்த பகுதியில் கொண்டுவரப்பட்டமையும் நேரடியாக அவதானிக்கப்பட்டது.

குறிப்பாக, சொல்லவேண்டுமானால் இள வயது பனைகள் பல தறிக்கப்பட்டும் அடிப்பாகங்கள் எரியூட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டன.

சம்பவம் தொடர்பில் நெல்லியடியைச் சேர்ந்த காணி உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் வரவழைக்கப்பட்டு வழக்குத் தொடரவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பனை மரங்களை வெட்டுவதற்காக எடுத்துவரப்பட்ட கனகர இயந்திரங்களை முறைப்பாட்டில் பதிவுசெய்யுமாறு எமது உத்தியோகத்தர்கள் வலியுறுத்திய நிலையில் சாவகச்சேரி பொலிஸார் ஏற்க மறுத்துள்ளனர்.

இந்தச் சட்டவிரோத செயற்பாடுகளுடன் சாவகச்சேரி பொலிஸாருக்குத் தொடர்பிருப்பதாக சந்தேகம் எழுந்த நிலையில் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு வாகன இலக்கங்களை முறைப்பாட்டில் பதியாவிட்டால் மேலிடத்தில் முறைப்பாடு செய்யவேண்டிவரும் எனக் கூறிய நிலையில் முறைப்பாட்டை ஏற்பதாக தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

சட்ட விரோத பனை மரங்கள் தறிக்கப்பட்டால் 0779273042 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களை தர முடியும் – என்றார்.

# மன்னாருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் திடீர் விஜயம்

## பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



ஜோசப் நயன்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் கடந்த சனிக்கிழமை (21) மதியம் மன்னாருக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த நிலையில் மன்னார் மாவட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் விசேட சந்திப்பும் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் சிவில் சமூக செயற்பாட்டளர்கள் ஒன்றிணைக்கப்பட்டு, மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பு, படையினர் வசம் காணப்படும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை, காற்றாலை மற்றும் கனிய மண் அகழ்வால் மன்னார் தீவில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டனர்.

மேலும் மன்னாரில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதோடு, அவற்றை நிவர்த்திசெய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் பொலிஸாரின் தடுப்பில் வைக்கப்படும் சந்தேகநபர்களை நேரடியாகச் சென்று சந்திக்கக்கூடிய செயற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# வவுனியாவில் விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது!

சிவகுமார் திவியா

வவுனியாவில் விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்ட மது ஒழிப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கஜேந்திரன் தலைமையில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது தேக்கவத்தை பகுதியிலுள்ள விடுதியொன்றில் விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 20 - 30 வயதுக்குட்பட்டவர்களாவர். அவர்கள் சுந்தரபுரம், குழுமாட்டு சந்தி, கல்மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

# தொடர் கன மழையால் பப்பாசிச்செய்கை அழிவு

## நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

சிவகுமார் திவியா

வவுனியா மாவட்டத்தில் தொடர் கன மழையால் 84 ஹெக்டேயர் பப்பாசிச் செய்கை அழிவடைந்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ள நிலையில், தமது நிலைமைகளை யாரும் கண்டுகொள்ளவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளின் பப்பாசிச் செய்கைகள் கன மழை காரணமாக முழுமையாகவும் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 21 ஹெக்டேயர் முழுமையாகவும் 17 ஹெக்டேயர் 75 வீதமாகவும் 21 ஹெக்டேயர் 50வீதமாகவும் 25 ஹெக்டேயர் 25 வீதமாகவும் அழிவடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பப்பாசிச் செய்கையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,


விவசாயிகளின் பாரிய நிதிச் செலவில் செய்கைபண்ணப்பட்ட பப்பாசிச் செய்கைகள் அண்மையில் பெய்த கன மழையால், சில தோட்டங்கள் முழுமையாகவும் சில தோட்டங்கள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. பப்பாசிச் செய்கைகள் அறுவடைக்குத் தயாரான நிலையிலேயே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கிராம சேவையாளருக்கு முறையிட்டதற்கமைவாக அவர், கிராமங்களில் பாதிக்கப்பட்ட பப்பாசிச் செய்கைகளைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் பாதிப்பு நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கையை யாரும் கண்டுகொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட சில விவசாயிகள் பப்பாசித் தோட்டங்களை படமெடுத்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தனர். அவர்கள் யாரும் கண்டுகொள்ளவில்லை கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் பாதிக்கப்பட்டுள்ள பப்பாசிச் செய்கையாளர்களுக்கு நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெள்ள நிவாரண உதவிகள்





பு.கஜிந்தன்

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - கோப்பாய் பிரதேச செயலகம் உரும்பிராய் தெற்கு பிரதேசத்திலுள்ள J/265 கிராம சேவையாளர் பிரிவான யோகபுரம் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 157 குடும்பங்களுக்கு, வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 7,85,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் யோகபுரம் அண்ணா சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் (22) காலை 10.30 மணியளவில் அண்ணா சனசமூக நிலையத் தலைவர் ச.ரவீன்ராஜ் தலைமையில் இடம்பெற்ற இவ்வுதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கியதுடன் மருத்துவர் செந்தில்குமரனும் கலந்துகொண்டார்.



# ஓமந்தையில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தியவர் கைது!

## 30ஆம் திகதிவரை விளக்கமறியல்

சிவகுமார் திவியா

வவுனியா, ஓமந்தை, சேமமடு பகுதியில் பல காலமாக சூட்சுமமாக இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கடந்த சனிக்கிழமை (21) பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா ஓமந்தை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக்கவின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சேமமடு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரை கைதுசெய்திருந்தனர்.

மேலும், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 1,50,000 மில்லி லீற்றர் கோடா மற்றும் 1,50,000 மில்லி லீற்றர் வடி ஆகியன மீட்கப்பட்டதுடன் ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதையடுத்து குறித்த நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, பல இளைஞர்கள் குறித்த பகுதியில் கசிப்பை அருந்திவிட்டு அப்பிரதேசத்தில் அசம்பாவிதங்களில் ஈடுபடுவதுடன் கடந்த காலங்களில் அப்பகுதியிலுள்ள நீரேந்து பிரதேசங்களுக்கு நீராடச் சென்று உயிரிழந்துள்ளமையை பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் ஆட்டங்கள் அனைத்தும் டுபாயில்




எட்டு அணிகள் மோதும் ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் பாகிஸ்தானில் நடைபெறும் நிலையில், இந்திய அணி மோதும் ஆட்டங்கள் டுபாயில் இடம்பெறுமென உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டம் மட்டும் பொதுவான இடத்தில் நடைபெறுமென்று சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்தது.

இந்நிலையில், இந்திய அணிக்குரிய ஆட்டங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பரிந்துரையில் டுபாயில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய அணி அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றால் இவ்விரு ஆட்டங்களும் டுபாயில் தான் நடைபெறும்.

மாறாக, இந்தியா இறுதிப்போட்டிக்கு வராவிட்டால் அதன் பிறகு இறுதி ஆட்டம் பாகிஸ்தானில் நடைபெறும். தொடரின் உத்தியோகபூர்வ போட்டி அட்டவணை இன்னும் ஓரிரு நாட்களில் வெளியிடப் படவுள்ளது.

# நியூசிலாந்துடன் மோதும் இலங்கை ஒருநாள் குழாம் அறிவிப்பு

## ஷிராஸ், எஷான் மாலிங்க ஆகியோருக்கு வாய்ப்பு

*(அகீல் சிஹாப்)*

நியூசிலாந்து அணியுடன் நடைபெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடருக்கான சரித் அசலங்க தலைமையிலான 17 பேரடங்கிய இலங்கை குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி தலா 3 போட்டிகள் கொண்ட ரி20 மற்றும் ஒருநாள் சர்வதேச தொடர்களில் விளையாடுகிறது. முதலில் நடைபெறவுள்ள ரி20 சர்வதேச தொடர் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகும் நிலையில், ஒருநாள் தொடர் அடுத்த மாதம் 5ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமாகிறது.

முன்னதாக ரி20 தொடரில் பங்கேற்கும் இலங்கை குழாம் அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது ஒருநாள் தொடரில் ஆடும் இலங்கை குழாம் நேற்று (23) மாலை இலங்கை கிரிக்கெட் சபையால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.



இதில் இளம் வேகப்பந்துவீச்சாளரான எஷான் மலிங்கவுக்கு வாய்ப்பு கிடைத்துள்ள அதேநேரம், தமிழ்பேசும் வீரரான இளம் வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் ஷிராஸுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவர் இலங்கை அணிக்காக இதுவரையில் இரு ஒருநாள் போட்டிகளில் மாத்திரம் ஆடியுள்ளார்.

நியூசிலாந்துடனான ஒருநாள் தொடரின் போட்டிகள் 5, 8, 11ஆம் திகதிகள் முறையே வெலிங்டன், ஹமில்டன் மற்றும் ஒக்லாந்தில் நடைபெறவுள்ளன.

17 பேரடங்கிய இலங்கை குழாம் வருமாறு,

சரித் அசலங்க, பெத்தும் நிஸங்க, அவிஷ்க பெர்னாண்டோ, நிஷான் மதுஷ்க, குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே, நுவனிது பெர்னாண்டோ, துனித் வெல்லாலகே, வனிந்து ஹசரங்க, மகேஷ் தீக்ஷன, ஜெஃப்ரி வாண்டர்சே, சமிது விக்கிரமசிங்க, அசித்த பெர்னாண்டோ, முஹமட் ஷிராஸ், லஹிரு குமார, எஷான் மலிங்க.

# பிரபல மல்யுத்த வீரர் திடீர் மரணம்

டபிள்யூ. டபிள்யூ. ஈ. மல்யுத்த போட்டிகளில் 90 கிட்ஸ்களின் மனதில் குடிகொண்ட மல்யுத்த வீரரான ரே மிஸ்டீரியோ சீனியர் உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 66 வயதான ரே மிஸ்டீரியோ சீனியர் உயிரிழந்து விட்டதாக அவரது குடும்பத்தினர் உறுதி செய்துள்ளனர். அவரது இறப்புக்கான முழுமையான காரணம் வெளிவரவில்லை.

மெக்சிகோவைச் சேர்ந்த ரே மிஸ்டீரியோ சீனியரின் இயற்பெயர் மிகுவல் ஏஞ்சல் லோபஸ் டயஸ் ஆகும். 1976ஆம் ஆண்டு தனது மல்யுத்த வாழ்க்கையை தொடங்கி 30 ஆண்டுகளுக்கு மேலாக மல்யுத்த போட்டிகளில் கலக்கிய ரே மிஸ்டீரியோ சீனியர் கடந்த 2009ஆம் ஆண்டு தொழில் முறை போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். ரே மிஸ்டீரியோ சீனியர் மல்யுத்த உலகில் நுழைவதற்கு முன்பு குத்துச்சண்டை வீரராக பயிற்சி பெற்றார். ஆனாலும் குத்துச்சண்டை பயிற்சியாளர்களின் தூண்டுதல், உத்வேகம் காரணமாக மல்யுத்த போட்டிகளுக்கு திரும்பினார். உலக மல்யுத்த சங்கம் நடத்திய பல்வேறு போட்டிகளில் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

முகத்தில் மாஸ்க் அணிந்தபடி சுழன்று சென்று எதிராளியை புரட்டியெடுக்கும் ரே மிஸ்டீரியோ சீனியரை அங்கிள் என ரசிகர்கள் அன்புடன் அழைத்தனர். எதிராளிகளின் முகத்தில் உதைக்கும் தனது டிரேட் மார்க் ஷொட்கள் மூலமாக தனக்கென்று உலகமெங்கும் பெரும் ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியவர் ரே மிஸ்டீரியோ.

ரே மிஸ்டீரியோ சீனியரின் சகோதரர் ரொபர்டோ குட்டெரெஸ் ஒரு வாரத்துக்கு முன்புதான் இறந்து போனார். தற்போது ரே மிஸ்டீரியோ சீனியரும் திடீரென உயிரிழந்திருப்பது அவரது குடும்பத்தினரை மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது.



# தென்னாபிரிக்காவை அதன் சொந்த மண்ணில் வெள்ளையடிப்பு செய்த பாகிஸ்தான்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை பாகிஸ்தான் அணி 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி எதிரணியின் சொந்த மண்ணில் வெள்ளையடிப்புச் செய்தது. மேலும் ரி20 தொடரை பறிகொடுத்த பாகிஸ்தான் அணி ஒருநாள் தொடரில் பதிலடி கொடுத்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி 20, 3 ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி20 தொடரை 2-0 என தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

இதையடுத்து நடைபெற்ற ஒருநாள் தொடரில் 2 போட்டிகள் முடிவில் இரு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றியது. இந்நிலையில், கடைசி ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

போட்டி நடைபெற்றபோது மழை பெய்த காரணத்தால்



இன்னிங்ஸ் 47 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 308 ஓட்டங்களைக் குவித்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சைம் அயூப் 101 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து 309 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தென்னாபிரிக்கா 42 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 271 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதன் மூலம் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்றியது. அடுத்து இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடர் நாளை மறுதினம் (26) பொக்சிங் டே டெஸ்ட் போட்டியாக ஆரம்ப மாகிறது.



# பார்ல் றோயல்ஸ் அணியின் ஒப்பந்தமான எசான் மாலிங்க

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் ஜனவரியில் நடைபெறவுள்ள எஸ்.ஏ. 20 லீக் தொடரில் இலங்கை அணியின் இளம் வேகப்பந்துவீச்சாளரான எசான் மாலிங்க பார்ல் றோயல்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தொடருக்காக பார்ல் றோயல்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த இங்கிலாந்து வீரர் ஜோன் டேர்னர், இங்கிலாந்து லயன்ஸ் அணிக்காக விளையாடவுள்ளதால் பார்ல் றோயல்ஸ் அணியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த நிலையில், ஜோன் டேர்னரின் இடத்துக்கு எசான் மாலிங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது. இலங்கை அணிக்காக இதுவரையில் அறிமுகமாகாத எசான் மாலிங்க, ஐ.பி.எல். தொடரில் சன்ரைஸர்ஸ் ஹைதராபாத் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7